# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2031 கார்த்திகை 29 வியாழக்கிழமை (14-12-2000)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:18


### நிவாரணமாக வழங்க வைத்திருந்த

## மனித பாவனைக்கு உதவாத பெருமளவு அரிசி கண்டுபிடிப்பு!

யாழ்ப்பாணம்,டிசெ.14

பொதுமக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்காக யாழ்.செயலகத்தால் விநியோகிக்கப்பட்ட மிகவும் பழுதடைந்த - மனித பாவனைக்கு உதவாத - பெருந்தொகையான அரிசியை சுகாதாரப் பகுதியினர் கண்டுபிடித்து முடக்கி வைத்துள்ளனர்.

சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத்தின் கிளை ஒன்றிலும், அதன் தலைமைக் களஞ்சியத்திலும் புழுக்கள், வண்டுகளுடன் - மிகவும் பழுதடைந்து மனித பாவனைக்கு ஒவ்வாத நிலையில் - நிவாரணத்துக்கு விநியோகிக்கப்பட இருந்த மொத்தம் 11 ஆயிரத்து 241 கிலோ அரிசி நேற்று நடத்தப்பட்ட திடீர் பரிசோதனையின்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

இதைவிட தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கக் களஞ்சியத்திலும் இதுபோன்று மிகவும் பழுதடைந்த பெருந்தொகையான அரிசி களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி மறுப்பு

சென்னை,டிசெ.14

ஈழவேந்தன் கொழும்புக்கு நாடு கடத்தப்பட்டதைக் கண்டித்து சென்னையில் நாளை நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டத்துக்கு அனுமதி வழங்க தமிழகப் பொலீஸார் மறுத்துள்ளனர். எனினும் ஆர்ப்பாட்டம் திட்டமிட்டபடி நடைபெறும் என ஏற்பாட்டாளர்களில் ஒருவரான பழ.நெடுமாறன் நேற்று சென்னையில் தெரிவித்தார். (ஐ-7)

### வலி. மேற்கில் ஊரடங்கு தளர்வு

யாழ்ப்பாணம்,டிசெ.14

சித்தன்கேணியில் இன்று இடம்பெறவுள்ள விநாயகர் திருவுருவப் பவனியை ஒட்டி சங்கானை, சுழிபுரம், சித்தன்கேணி, பண்ணாகம் ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் இரவுநேர ஊரடங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## மேலும் இரு தடவைகள் 'லங்கா முடித்த' சேவை

யாழ்ப்பாணம்,டிசெ.14

காங்கேசன்துறையில் இருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் மேலும் இரு தடவைகள் பயணிகள் சேவையை நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்தக் கப்பல் மூலம் நான்கு தடவைகள் மட்டுமே சேவையை நடத்த முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாகவும் -

அந்தச் சேவைகள் பூர்த்தியான போதும்கூட மேலும் பயணிகள் பயணம் செய்யக் காத்திருப்பதால் மேலதிகமாக இந்த இரு சேவைகளையும் நடத்த ஏற்பாடாகியுள்ளதாகவும்-அவர் தெரிவித்தார்.

காங்கேசன்துறையில் இருந்து நேற்று முன்தினம் மாலை 6.30 மணிக்கு ஆயிரத்து 250 பயணிகளுடன் புறப்பட்ட 'லங்கா முடித்த' கப்பல் நேற்று நண்பகல் திருமலை வந்து சேர்ந்ததாக திருகோணமலை பிரதேச செயலர் தெரிவித்தார்.

இந்தக் கப்பலுக்குத் தேவையான நீர்மட்டம் கடலில் இல்லாத காரணத்தால் ஏற்பட்ட தாமதத்தை அடுத்து பயணிகள் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோயிலில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக முற்கொண்டு கிடைத்த செய்தி நேற்று வெளியாகியிருந்தது. எனினும் கப்பல் தாமதமாக - பிற்பகல் 6.30 மணியளில் திருமலை நோக்கிப் புறப்பட்டதாக - நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

# சமாதான முயற்சிகளை விளக்க கதிர்காமர் புதுடில்லி செல்கிறார்

### பயணப் பதிவு புதிய இடத்தில்

யாழ்ப்பாணம்,டிசெ.14

வெளியிடங்களுக்குக் கப்பல் மற்றும் விமானம் மூலம் பயணம் செய்வதற்கான பதிவுகளை மேற்கொள்ளும் அலுவலகம் யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மணியம்ஸ் கட்டடத்தில் நேற்று முதல் இயங்கத் தொடங்கியது. கண்டி வீதியில் அமைந்துள்ள வடமாகாண மீள்குடியமர்வு, புனர்வாழ்வு அதிகாரசபை அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டுவந்த இந்தப் பதிவு வேலைகள் நேற்று முதல் புதிய அலுவலகத்தில் இடம்பெற்று வருகின்றன. (ஐ-3)

## இந்தியத் தலைவர்களுடன் இரு தினங்கள் பேசுவார்

கொழும்பு,டிசெம்பர்14

**விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்காக நோர்வேயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முயற்சிகளின் ஆகப் பிந்திய பெறுபேறுகளை இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவதற்காக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நாளை புதுடில்லி செல்லவுள்ளார்.**

இரு தினங்கள் அங்கு அவர் தங்கியிருந்து பிரதமர் வாஜ்பாய் உட்பட முக்கிய தலைவர்களுடனும் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சிங்குடனும் பேச்சு நடத்துவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை அரசாங்கத்துடன் நிபந்தனையற்ற பேச்சு நடத்த தயார் என விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தினச் செய்தியில் அறிவித்திருந்தார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

### பம்பைமடுவில் இளைஞர்கள் இருவர் பலி

வவுனியா,டிசெ.14

வவுனியா மாவட்டம் பம்பைமடுக் காட்டுப் பகுதியில் உடும்பு வேட்டைக்குச் சென்ற அப்பாவி இளைஞர்கள் இருவர் கடந்த செவ்வாயன்று பிற்பகல் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்.

அருளானந்தம் கமலநாதன் (வயது-30),சின்னத்தம்பி சிவகுமார்(வயது-29) ஆகியோரே உயிரிழந்தனர்.

இதற்கிடையில் பம்பைமடுக் காட்டுப் பகுதியில் அன்றைய தினம் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டதாகப் படையினர் அறிவித்துள்ளனர். (ஐ-7-164)

### கிளிநொச்சி கரடிப்போக்கில்

## மர்மப் பொருள் வெடித்து இருவர் உடல் சிதறிப் பலி!

வவுனியா.டிசெ.14

வீதியோரத்தில் கிடந்த மர்மப் பொருள் ஒன்றை எடுத்து கல் மீது குத்திப்பார்க்க முயன்றபோது அது வெடித்ததில் இருவர் உடல் சிதறிப் பலியாகினர்; ஒருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் கிளிநொச்சி - கரடிப்போக்குச் சந்திக்கு அருகில் இடம்பெற்றது.

மூன்று பிள்ளைகளின் தந்தையான மாணிக்கம் இந்திரன் (வயது 52) மற்றும் வன்னேரிக்குளத்தைச் சேர்ந்த ச.கிருபாகரன் (வயது 16) ஆகியோரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்தவர்களாவர். அக்கராயனைச் சேர்ந்த சேவியர் டென்சிபோல் (வயது 22) என்பவரே படுகாயமடைந்தார். இவர் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கரடிப்போக்குச் சந்திப் பகுதி முன்னர் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-7-164)

## கதிர்காமரின் அறிக்கை குறித்து பிரதமருக்கு எதுவும் தெரியாதாம்!

### அமைச்சரவைக் கூட்டத்தில் அவரே தெரிவிப்பு

கொழும்பு,டிசெ.14

விடுதலைப் புலிகள் அமைப்புடன் எந்தவித நிபந்தனையும் இன்றிப் பேச்சு நடத்த அரசு தயாராக இருப்பதாகத் தெரிவித்து - சமாதானப் பேச்சுத் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை விளக்கி - வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் பத்திரிகையாளர் மாநாட்டில் விடுத்த அறிக்கை தொடர்பாகத் தனக்கு எதுவும் தெரியாது என்று பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க கூறியுள்ளார்.

அமைச்சரவைக் கூட்டம் நேற்று பிரதமர் தலைமையில் நடைபெற்ற சமயம் அமைச்சர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் பிரதமர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்துவது தொடர்பாக அரசாங்

(14ஆம் பக்கம் பார்க்க)

## பாலியல்வல்லுறவின் பின் ஈழ அகதிச் சிறுமி கொலை!

### தமிழக முகாமில் சம்பவம்

சென்னை,டிசெ.14

தமிழ்நாடு - தர்மபுரம் அகதி முகாமில் தங்கியிருந்த ஈழ அகதிச் சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

14 வயதுடைய அந்தச் சிறுமியின் சடலம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அகதி முகாமுக்கு அருகில் உள்ள ஒதுக்குப்புறமான பகுதியில் இருந்து மீட்கப்பட்டுள்ளது.

கடந்த திங்களன்று பாடசாலைக்குச் சென்ற பிரஸ்தாபச் சிறுமி வீடு திரும்பாததை அடுத்து உறவினர்கள் பொலீஸாரிடம் முறையிட்டிருந்தனர். பொலீஸார் மேற்கொண்ட

(14ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்களில் பங்குபற்றுவது யார்? அமைச்சர்கள் மத்தியில் போட்டி!

கொழும்பு,டிசெ.14

தற்போதைய சமாதான முயற்சிகள் வெற்றி பெற்றால் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான பேச்சுக்களில் ஆரம்பத்தில் அமைச்சர்கள் அடங்கிய குழு பங்குபற்றும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

பேச்சுக்களில் அரசதரப்புப் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்ளப் போகும் அமைச்சர்களைத் தெரிவு செய்வதில் இழுபறிநிலை ஏற்படக்கூடும் என்று கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

பேச்சுக்களில் கலந்துகொள்வது தொடர்பாக அமைச்சர்களிடையே இப்போதே போட்டி நிலவுவதாக அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

வடக்கு - கிழக்குப் பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட சிறு

(14ஆம் பக்கம் பார்க்க)

### சடலம் இன்று புலிகளிடம் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.14

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினருடன் இடம்பெற்ற மோதலில் உயிரிழந்த விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரின் சடலம் இன்று செஞ்சிலுவை சர்வதேசக் குழு மூலம் விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

அப்பகுதியில் இடம்பெற்ற மோதலின் பின்னர் படையினரால் வீடு

(14ஆம் பக்கம் பார்க்க)

## 800 தபால் பொதிகள் கப்பலில் வருகின்றன

திருகோணமலை,டிசெ.14

கடந்த ஒரு மாதகாலமாக திருகோணமலையில் தேங்கிக் கிடந்த குடாநாட்டுக்குரிய 800 தபால் பொதிகள் 'லங்கா முடித்த' கப்பல் மூலம் நேற்று யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்பட்டதாகத் திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலர் வி.வேலும்மயிலும் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை -

நேற்று திருகோணமலை போய்ச் சேர்ந்த 'லங்கா முடித்த', பயணிகளை இறக்கிவிட்டு அங்கிருந்து பயணிகள் எவரையும் ஏற்றாமலேயே புறப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## பேராப்பொருள்

ஆற்றுகையின்

தயாரிப்புப் படிமுறை பற்றிய கலந்துரையாடல்

(ஆற்றுகையின் வீடியோக் காட்சியும் இடம் பெறும்)

"ஆர்வலர்களை அழைக்கின்றோம்"

காலம : 15.12.2000, 3.00 மணி
இடம் : பொருளியற்றுறை,
யாழ் பல்கலைக்கழக மண்டபம். (81672)

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி

சகல ஆசிரியர்களும் இன்றைய தினம் (14.12.2000) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு பாடசாலைக்குத் தவறாது சமுகம் தருமாறு வேண்டுகிறேன்.

அதிபர்
ஸ்கந்தவரோதயக் கல்லூரி

(81667)


## மாணவர்களே! உங்களுக்கான விடுமுறைக்கால கணனிப்பயிற்சி

- மாணவர் கல்வியைப் பாதிக்காத வகையில் ஒழுங்குபடுத்தப்படும்.
- ஒவ்வொரு குழுவிலும் 4 மாணவர்கள் மட்டும்.
- ஒவ்வொரு மாணவரும் தனிப்பட்ட கணனிகள் மூலம் பயிற்றுவிக்கப்படுவர்.
- இன்றே இணைந்துகொள்ளுங்கள்.

TRRO CTC
K.K.S.வீதி, மருதனார்மடச் சந்தி.
மானிப்பாய் வீதி, உரும்பிராய். (C/14294)


## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் யாழ்.கிளை தலைமையகம்

## அறிவித்தல்

16.11.2000 திகதிய 'உதயன்' பத்திரிகையில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளை தலைமையகம், '21.05.2000 அன்று நடைபெறவேண்டிய ஒத்திவைக்கப்பட்ட பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகக் குழு உறுப்பினர் தேர்தலும்' என்ற விளம்பரத்தில் இரண்டாவது வரியில் காணப்படும் 'தமது பிரிவுப் பொதுச்சபையினைக் கூட்டி' என்பதற்குப் பதிலாக '21.05.2000 இல் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்துக்கு சமுகம் அளிப்பதற்காக ஒவ்வொரு பிரிவினாலும் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள், பிரதிப் பிரதிநிதிகள் ஆகியோரை மாத்திரமே கூட்டி' எனத் திருத்தி வாசிக்கவும்.

செஞ்சிலுவைச்சேவையில்,
கௌரவ உப செயலாளர்,
இ.செ.சி.ச.யாழ்.கிளை.

*73,கண்டி வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(C/14293)

## நன்றி நவிலலும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில் 08.1.1921 — ஆண்டவன் அடியில் 14.11.2000

### திருமதி அப்புத்துரை வள்ளியம்மை

14.11.2000 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி திருமதி அப்புத்துரை வள்ளியம்மை அவர்களின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட உறவினர், அயலவர் , நண்பர்கள் ஆகியோருக்கும் மற்றும் பல்வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (14.12.2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*முதலாம் கட்டை,*
*சந்திரபுரம்,*
*உடுவில்.* (81668)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## ஆலயத்தில் பூசை வழிபாடு

அரியாலை,டிசெ.14

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலயத்தில் வாரத்தில் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் மட்டும் ஒரு நேரப் பூசைகள் இடம் பெற்று வருகின்றன. (ஜ-17)

## பெயர்ப்பலகை திறப்பு

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் பெயர்ப் பலகைத் திறப்பு விழா இன்று பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

வர்த்தகரான எஸ்.இராமேஸ்வரன் பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பார். (ஜ-3)

## உலர் உணவு பெறுமாறு அறிவுறுத்து

அரியாலை,டிசெ.14

யாழ்.பிரதேச செயலர் பிரிவில் இடம் பெயர்ந்தோருக்கான 93 ஆம் இலக்க 'எ', 'பி' முத்திரைப் புள்ளிக்கான பொருள்களை எதிர்வரும் 20ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகள் ஊடாக வழங்கப்பட்டுவரும் இந்த நிவாரணப் பொருள்களில் சிவப்புப்பச்சை அரிசி, சீனி, நெஸ்பிறே பால் மா என்பன அடங்கியுள்ளன.

(ஜ-17)

## மாணவன் கிணற்றுக்குப் பலி

யாழ்ப்பாணம்,டிசெ.14

குளிப்பதற்காகக் கிணற்றடிக்குச் சென்றவர் அக்கிணற்றுள் தவறி விழுந்து உயிரிழந்தார்.

சுன்னாகம், கந்தரோடையில் நேற்றுக்காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அருந்தவராசா ஆர்த்தீபன் (வயது15) என்பவரே மரணமானவராவார். இவர் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் 10 ஆம் தர மாணவராவார்.

யாழ்.ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் மரண விசாரணையின்பின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

(ஜ-15)

## பணியாளருக்குக் கொடுப்பனவு

அரியாலை,டிசெ.14

யாழ்.மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வள அபிவிருத்திக கூட்டுறவுச்சங்கங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாதாந்த இடைக்காலக் கொடுப்பனவாக நானூறு ரூபா வழங்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாதாந்தக் கொடுப் பனவு கடந்த ஓகஸ்ட் மாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஜ-17)


லஷ்சுமி சினிமா
இணுவில்
சிவா, மோகினி
நடித்த
ஈரமான ரோஜாவே
(றீஸ்) காட்சிகள் 10.30, 2.30 (பு.நே.)
(81669)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
விஜய், ஜோதிகா
நடித்த
S.J.சூர்யாவின்
குஷி
தினசரி - 11.00, 2.30 (பு.நே.)
(81590)

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் (இரு வேடம்)
சிம்ரன், ஜோதிகா,
விவேக்
மற்றும் பலரின் நடிப்பில்
வாலி
காட்சிகள்:10.30, 2.00 (பு.நே.)
(C/14347)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜேஸ்வரி காமாசஷ்சி சுந்தரேஸ்வரக்குருக்கள்

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் கொழும்பு கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி காமாக்ஷி சுந்தரேஸ்வரக்குருக்கள் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் காலமானார்.

அன்னார் சிவஸ்ரீ காமாக்ஷி சுந்தரேஸ்வரக்குருக்களின் அன்பு மனைவியும் கொழும்பில் வசிக்கும் வாகீஸ்வரி, பாலேந்திரக்குருக்கள், ஜெயா, பிறேமா ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாத்தனை,*
*சம்பியன் ஒழுங்கை,*
*கொக்குவில் கிழக்கு.* (81673)

தகவல்:
திருமதி N.N.தாஸக்குருக்கள்,
சீதாலட்சுமி அம்மா.
(மைத்துனர்)

## தம்பாப்பிள்ளை குணசிங்கம் B.Sc

(ஓய்வு பெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், 23.4ஆம் குறுக்குத் தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது 18/1 அலோ அவெனியு கொள்ளுப்பிட்டியில் வசித்து வந்தவருமான தம்பாப்பிள்ளை குணசிங்கம் B.Sc 12.12.2000 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆசிரியர்கள் தம்பாப்பிள்ளை சின்னம்மா தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், திருமதி கீதாஞ்சலி சுரேந்திரன்(கணக்காளர்,லண்டன்), ரவீந்திரன் (நில அளவையாளர், கண்டி) வதனி(கொழும்பு) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சுரேந்திரனின்(பொறியியலாளர், லண்டன்) அன்பு மாமனாரும், காலஞ்சென்ற நேசமலர் பாலகிருஷ்ணன் (ஆசிரியை), ஓய்வுபெற்ற ஆசிரியைகளான பவளரத்தினம் நாகேஸ்வரன், சொர்ணமலர் கணபதிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்றவர்களான M.சுப்பிரமணியம் (பிரதம கணக்காளர், றெயில்வே திணைக்களம்),கமலாம்பிகை ஆகியோரின் மருமகனும், சுமித்திராதேவி பத்மநாதன் (கொழும்பு), M.S.ஸ்ரீகாந்தா (கொழும்பு),வைத்தியகலாநிதி சாரதாதேவி பாலச்சந்திரன்(கொழும்பு), திருமதி சறோஜா அலன் (கணக்காளர், லண்டன்), மாணிக்கவாசகர் (பொறியியலாளர், லண்டன்), சாந்திகுமார் (முன்னாள் TRI - லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 18/1, அலோ அவெனியு, கொள்ளுப்பிட்டி இல்லத்தில் சனிக்கிழமை 16.12.2000 காலை நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

*18/1,அலோ அவெனியு,*
*கொள்ளுப்பிட்டி.*
*T.P .01-301998* (81661)

தகவல்
R.பத்மநாதன்,
R.இராசாராம் J.P
T.P 2347
(மைத்துனர்கள்)

## கந்தையா சின்னத்தம்பி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சின்னத்தம்பி 11.12.2000 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் செல்வராணியின் அன்புக் கணவரும் குசலகுமாரி, ரவிச்சந்திரன், காலஞ்சென்ற சிறீஸ்கந்தராசா ஆகியோரின் அன்புத் தந்தையும், நேசரத்தினம்(கனடா) அவர்களின் அன்பு மாமனாரும், திருமதி சிவபாக்கியம், கந்தையா(கனடா), திருமதி இரத்தினம் மகாதேவன் (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பத்மநாதன், மகாதேவன், திருமதி வவி பாலசுப்பிரமணியம், பாக்கியநாதன் ஆகியோரின் மைத்துனரும் தினேஷா, சஞ்சீவன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2000) வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தாவடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்* (81663)

தகவல்
மனைவி, பிள்ளைகள்

## வேலுப்பிள்ளை பொன்னையா

(சோதிடர்)

ஆத்தியடி வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கலட்டி வீதி, கோண்டாவில் மேற்கு கோண்டாவிலில் வசித்தவருமாகிய வேலுப்பிள்ளை பொன்னையா (13.12.2000) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அன்னம்மாவின் அன்புக் கணவரும் மனோன்மணி, கந்தசாமி (நீதிமன்ற ஊழியர், பருத்தித்துறை), நவரத்தினமலர் (லண்டன்), யோகராசா (பொறியியலாளர், கனடா), கிருஸ்ணகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் முருகேசு (C.T.B., பருத்தித்துறை), சீவரத்தினம் (லண்டன்), சபாநாயகம் (சபா - வானதி ரெக்ஸ்ரைல், கொடிகாமம்), சேதுப்பிள்ளை, தேன்மொழி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2000) வியாழக்கிழமை பகல் 11.00 மணியளவில் தற்போது வசிக்கும் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோண்டாவில் காரைக்கால் இந்த மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
*சி.தியாகராஜா,*
*கலட்டி வீதி,*
*கோண்டாவில் மேற்கு,*
*கொண்டாவில்.*

தகவல்:
S.S.சபா (மருமகன்)

(81666)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

# உதயன்

## தமிழரின் விசனம்

சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்காக வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்.

கால அட்டவணை வகுத்தே பேச்சுக்கள் நடைபெறும். பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படுமிடத்தே வடக்கு—கிழக்குப் பிரதேசத்தில் இயல்பு நிலையை உண்டாக்குவது குறித்து ஆராய முடியும். இந்த இரண்டு அம்சங்களையும் அமைச்சர் முதன்மைப்படுத்திக் கூறியுள்ளார்.

கால அட்டவணை வகுத்துப் பேசுவது என்பது வரவேற்கத் தக்கது; கேட்பதற்கு நன்றாகவும் இருக்கும். ஆனால் கால அட்டவணை மிகக் குறுகிய காலத்தில் அமைந்தால், பேச்சுக்கள் முழுமை அடைந்து வெற்றி கிடைக்குமா என்பது சந்தேகமாகிவிடும். கால அட்டவணையை வைத்துக் கொண்டு வேகமாகப் பேசும் போது பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வுகளைச் சரிவரக்காண முடியாது. அவை அரை குறையானவையாகவே இருக்கும்.

கால அட்டவணையைச் சரிவரப் பூர்த்தி செய்வது என்பது கடினம். முந்திய அரசாங்க காலத்தில் அரசமைப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கு நாடாளுமன்றத்தில் அங்கம் வகித்த கட்சிகளுடன் பேசி முடிக்க வென்று ஜனாதிபதி மூன்று மாத கால அட்டவணை வகுத்தார். ஆனால் ஆறு மாதங்கள் கடந்தும் பணி பூர்த்தியாகவில்லை. ஆகையால் கால அட்டவணையையே அரசு ''கட்டிப்பிடித்து''க் கொண்டிருக்க விரும்பினால், காரியம் சித்தியாகும் வாய்ப்புக் குறைந்துவிடும்.

பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் காண்பதனைப் பொறுத்தே வடக்கு—கிழக்கில் இயல்பு நிலையைக் கொண்டு வருவது குறித்து ஆராய முடியும் என்பது அரசின் அடுத்த நிலைப்பாடு.

வடக்கு — கிழக்கில் இயல்பு நிலையை உண்டாக்குவதற்கு இங்கு நடைபெறும் போர்தணிய வேண்டியது அவசியம். அதனை அரசு விரும்பவில்லை என்பதனையே அமைச்சரின் கூற்றுத் தெளிவாக்குகிறது.

விடுதலைப் புலிகளை அரசு நம்பவில்லை; அதனால் அது போர் நிறுத்தம் செய்யப் பின்னடிக்கிறது. முந்திய அனுபவங்களே அந்த நம்பிக்கையின்மைக்குக் காரணம் என்று அரசு கூறும்,

நீண்ட காலமாக இரண்டு தரப்புகளுக்கும் இடையில் போர் நடைபெறுவதால், அது ஓரளவேனும் தணிக்கப்படாவிட்டால், இரண்டு தரப்புகளும் பரஸ்பரம் அடுத்த தரப்பை நம்பாமல், பெயருக்காகப் பேச்சுவார்த்தை நடத்துவதாகிவிடும். அத்தகைய மனநிலையுடன் நடத்தப்படும் பேச்சுக்கள் இலகுவில் வெற்றியளிக்கா.

பொருளாதாரத் தடையை நீக்கி, இயல்பு நிலையை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டால், அது புலிகளுக்கே வாய்ப்பாகிவிடும் என்ற பார்வையுடன் மட்டுமே அரச தரப்பு இந்த விடயத்தை நோக்குகிறது.

இயல்பு நிலை வாழ்க்கைக்கு வகை செய்தால், அதனால் நன்மை அடையும் பெரும் பங்கினர் வடக்கு—கிழக்கு வாழ் மக்களே என்ற பக்கத்தைப் பார்க்க அரசு மறுப்பது கவலைக்குரியதாகும்.

சமாதானப் பேச்சு— விடுதலைப் புலிகளுடன் பேசுவது— என்ற விருப்பத்துக்கு வந்த பின்னரும், போரைத் தணிப்பதற்கேனும் மனங்கொள்ள அரசு பின்னடிப்பது கண்டு, தமிழ் மக்கள் பெரும் விசனமுறுகின்றனர்.

# உள்ளூராட்சி உதவியாளர்கள்

# நிரந்தர நியமனம் பெற்றனர்

யாழ்ப்பாணம், டிசெ. 14

யாழ். மாவட்டத்தில் 14 உள்ளூராட்சி நிறுவனங்களில் பணிபுரியும் 14 உள்ளூராட்சி உதவியாளர்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாண பொதுநிர்வாக, உள்ளூராட்சி, கூட்டுறவு வீதி அபிவிருத்தி அமைச்சினால் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை, உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம் ஆகியவற்றில் கடமையாற்றிய 14 அபிவிருத்தி உதவியாளர்களுமே பதவி உயர்த்தப்பட்டு உள்ளூராட்சி உதவியாளர்களாக நிரந்தர நியமனம் 16-5-2000 முதல் வழங்கப்பட்டுள்ளது.

நிரந்தர நியமனம் பெற்றோர் விவரம் வருமாறு:-

★ செல்வி ஜெமிஸ் பேரின்பநாயகி (வலி. கிழக்கு பிரதேச சபை),

★ செல்வி சு. நீலதி (பி. உ. உ. அலுவலகம்),

★ திருமதி கே. நந்தினி (பருத்தித்துறை பிரதேச சபை),

★ த. ஸ்ரீமுரளிதரன் (வேலணை பிரதேச சபை),

★ செல்வி ச. கலையரசி (வலி. தெற்கு பிரதேச சபை),

★ திருமதி சோ. ஜெயந்தா (வலி. மேற்கு பிரதேச சபை),

★ செல்வி வே. குமுதினி (வலி வடக்கு பிரதேச சபை),

★ செல்வராஜா ரமேஷ் (வலி. தென் மேற்கு பிரதேச சபை),

★ செல்வி க. நாகவதனி (பளைப் பிரதேச சபை),

★ இ. சுப்பிரமணியம் (ஊர்காவற்றுறை பிரதேச சபை),

★ ச. கனகதுரை (சாவகச்சேரி பிரதேச சபை),

★ செல்வி சி. கேமமாலினி (வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபை),

★ திருமதி என். மகாலிங்கம் (சாவகச்சேரி நகரசபை),

★ ஆர். அறிவரசன் (யாழ். மாநகர சபை).

நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட உள்ளூராட்சி உதவியாளர்களுக்கான கடமைப் பட்டியல் நிர்வாகம், திட்டமிடல் உள்ளடங்கலாக பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு செயலாளரினால் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என உள்ளூராட்சி ஆணையாளர் ச. சபாபதிப்பிள்ளை தெரிவித்தார். (ஐ-185)

## இன்று விநாயகர் பவனி

யாழ்ப்பாணம், டிசெ. 14

நாட்டில் சாந்தி சமாதானம் நிலவ வேண்டி சித்தன் கேணி மக்கள் ஏற்பாடு செய்துள்ள விநாயகர் திருவுருவப் பவனி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு சித்தன்கேணி சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாக விருக்கின்றது.

இந்தப்பவனி சித்தன்கேணி மகா கணபதிப் பிள்ளையார் ஆலயம், வழக்கம்பரைமுத்துமாரி அம்மன் ஆலயம் ஆகியவற்றுக்குச் சென்று மீண்டும் சிவசிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் முடிவடையும்.

இந்தப் பவனியில் பாடசாலை மாணவர்களையும் தனியார் கல்வி நிறுவனமாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு வலி. மேற்கு பிரதேச சபைத் தலைவரும் வலி. மேற்கு இந்து ஆலயங்களின் மகாசபையின் போசகருமான ந. திரிலோகநாதன் கேட்டுள்ளார். (ஐ-3)

# குழந்தைகளின் முன்னேற்றத்தில் நாடுகளுக்கு அக்கறையில்லை

## 'யுனிசெவ்' இயக்குநர் கவலை

உலக அளவில் நாடுகள் குழந்தைப் பராமரிப்புத் திட்டங்களுக்கு போதிய அளவு நிதி ஒதுக்கி பிரச்சினைகளைத் தீர்ப்பதில்கவனம் செலுத்துவதில்லை.

இவ்வாறு 'யுனிசெவ்'' அமைப்பின் செயல் இயக்குநர் கேரோல் பிலாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் வருத்தம் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில்.

சிறுவர்களுக்கான கல்வித் திட்டங்களும் உலக நாடுகளால் புறக்கணிக்கப்பட்டு வருகின்றன.

பொருளாதார சமுதாயப் பிரச்சினைகளை நாடுகள் தத்தமது எதிர் காலச் சமுதாயத்தின் மீது மலை போல் குவித்து வைத்துள்ளன.

ஆண்டுதோறும் உலகின் வருமானத்தில் 2 சத வீதம் அல்லது 80 பில்லியன் டொலர்கள் புதிதாகப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தைகளுக்கும் சமமான வாழ்க்கையை அமைத்துத் தருவதற்குத் தேவைப்படுகிறது.

ஆபிரிக்கா மற்றும் தெற்காசியா தவிர்ந்த ஆசியப் பகுதிகளில் 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் மரணமடைவது அதிகரித்துள்ளது. இது தடுக்கப்பட வேண்டும்.

நாடுகள் மற்றும் சமூகங்களின் வளர்ச்சிப்பலம், அவற்றில் வாழும் குழந்தைகள், பெண்கள் ஆகியோரின் வாழ்வு நிலை மேம்படுவதிலேயே தங்கியுள்ளது.

இவர்களைப் பாதுகாக்கத் தவறும் எந்த அரசும் மக்கள் உரிமைகளை மீறுவதாகவே கருதப்படவேண்டும்.

என்று 'யுனிசெவ்' செயல் இயக்குநர் தெரிவித்துள்ளார். (ஒ-5-7)

## சொத்துக்கான இழப்பீடு

# 387 குடும்பங்களுக்கு தீவகத்தில் கொடுப்பனவு

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் அசையும் அசையாச் சொத்துக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபாவில் முதற்கட்டக் கொடுப்பனவான 10 ஆயிரம் ரூபா மேலும் 387 குடும்பங்களுக்கு வழங்கப்பட உள்ளது.

இந்தக் கொடுப்பனவுக்குரிய காசோலைகள் உதவி அரசாங்க அதிபர் பணிமனையினால் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. கொடுப்பனவுகளைப் பெற உள்ள குடும்பங்கள் நேற்று புதன்கிழமை முதல் வங்கிகளில் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ. குமாரசாமி சர்மா தெரிவித்தார்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள தீவுகள் ரீதியாக கொடுப்பனவு வழங்கப்பட உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

அனலைதீவு - 27, எழுவைதீவு - 10, காரைநகர் - 202, ஊர்காவற்றுறை - 148. (ஐ-73)

## தாதியர் தெரிவு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிசெ. 14

தாதியர்களைப் புதிதாகத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்று முதல் மூன்று தினங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது. நேர்முகப்பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே தபால் மூலம் அனுப்பட்டுள்ளன இந்த மூன்று நாள்களும் மொத்தம் 90 பேர் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-139)

## விஞ்ஞான சங்க கருத்தரங்கு

யாழ்பபாணம், டிசெ. 14

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் கருத்தரங்குத் தொடர் - 4 இன்று பிற்பகல் 3 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் 'வன்னிப் பிரதேசத்தின் மூன்றாம் நிலைக் கல்வியில் அண்மைக்கால நெருக்கடி' என்ற தலைப்பில் பல்கலைக்கழக புவியியற்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஏ. எஸ். சூசை கருத்துரை வழங்கவுள்ளார். (ஐ-6)

## தரம் 9 மாணவருக்கு

பளை மத்திய கல்லூரியின் தரம் 9 மாணவர்கள் அனைவரும் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பம் இடுவதற்காக எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி ம.ம. விற்கு வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதுவரை கணிப்பீடு மற்றும் பரீட்சைப் புள்ளிகளை ஒப்படைக்காதவர்கள் அவற்றையும் எடுத்து வருமாறு அதிபர் தெரிவித்துள்ளார். (ம-173)

★ ★ ★

இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகளில் கற்கும் சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலய தரம் 9 மாணவர்களை தமது கணிப்பீட்டுப் புள்ளிகளை கற்கும் பாடசாலை அதிபர்களின் உறுதிப்படுத்தலோடு நாளை வெள்ளிக்கிழமைக்கு முன் மருதனார்மடம் கல்விக்கோட்டத்தில் அல்லது நெல்லியடி வலயக்கல்வித் திணைக்களத்தில் ஒப்படைக்குமாறு அதிபர் கோரி உள்ளார்.

அத்துடன் தரம் 9 மாணவர்களையும் ஆசிரியர்களையும் விண்ணப்ப படிவத்தில் கையெழுத்திட எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 30 மணிக்கு நெல்லியடி ம ம.விற்குத் தவறாது வருகை தருமாறும் அதிபர் தெரிவித்துள்ளார். (ம-173)

## சமய சந்நிதிகள்

வட்டுக்கோட்டை வடக்கு பிரமனாச்சி தோட்டம் அருள்மிகு ஸ்ரீ கற்பகப்பிள்ளையார் கோயிலில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் விநாயகர் விரதம் (பிள்ளையார் பெருங்கதை) ஆரம்பமாகியது. தொடர்ந்து 21 தினங்கள் நடைபெறும்,

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான பிள்ளையார் கோயில்களிலும், பிள்ளையார் விக்கிரகம் உள்ள ஆலயங்களிலும் தேய்பிறை ''அபரபக்கம்'' சங்கடஹர சதுர்த்தி விரதம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை, வழிபாடுகளுடன் இன்றுவியாழக்கிழமை மாலை நடைபெறும்.

வசந்த மண்டபப் பூசையை அடுத்து மாலை 5 மணியளவில் சுவாமி வீதிவலம் வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார். (ம-30)



## சாயி சிந்தனை

நீங்கள் நற்குணம் மிகுந்தவர், கல்வி கற்றவர், புத்திக் கூர்மையுள்ளவர். ஆயினும் சுயநலங் காரணமாக, அனைத்தும் எரிந்து சாம்பலாகின்றன. ஒரு பானை முழுவதும் பால் நிறைந்தாலும், ஒரு துளி நஞ்சு கலந்தால் அனைத்தும் விஷமாகிவிடும். வெறுப்பையோ பகைமையையோ மனதிற்குள் விடாதீர்கள். அன்பு நிறைந்த சமுதாயப்பணியில் ஈடுபடுங்கள். சிறு செயலையும் மிகப்பயனுள்ளது என்று கருதிச் செயற்படுங்கள். பெருஞ் செயல்களில் ஈடுபடவில்லை என்று ஏமாற்றமடையாதீர்கள்.

ஆதாரம்:- சனாதனசாரதி

## நாளை

கார்த்திகை 30

வெள்ளிக்கிழமை

சதுர்த்தசி

காலை 7.02 வரை

திதி: பஞ்சமி

பின் இரவு 4.33 வரை.

நட்சத்திரம்: ஆயிலியம்

பின் இரவு 4. 43 வரை.

சுபநேரம்: 6.22 -7.52

ராகுகாலம்: 10.52-12. 22

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி.)

## உதயவாக்கு

கெட்டவர்களுடன் நீ சேர்ந்தாயானால் நீயும் கெட்டவனாகி விடுவாய்.

— மினாண்டர்

# சின்னஞ்சிறு விளம்பரம்

## பிரத்தியேக வகுப்புகள்

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம், தமிழ், சமூகக்கல்வி, சமயம் ஆகிய பாடங்கள் ஆண்டு 1முதல் 11 வரையான வகுப்புகள் 15.12.2000 அன்று ஆரம்பம். தொடர்பு: 60, வைமன்வீதி, நல்லூர். (பி.ப.4மணி முதல் பி.ப.7மணி வரை). 16/2, கச்சேரி நல்லூர்வீதி, யாழ்ப்பாணம். (மு.ப.8முதல் பி.ப.3வரை) (81609)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய (நட்சத்திரம் பூரம் 3ஆம் பாதம்) இங்கிலாந்தில் பொறியியலாளர் தகைமையுடைய தனியார் நிறுவனமொன்றில் உதவி முகாமையாளராகக் கடமையாற்றும் மணமகனுக்கு படித்த மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விள.இல.1156, மே/பா. உதயன். (81535)

## விற்பனைக்கு

இல.42, யாழ்.இந்துக்கல்லூரி வீதியில் 4 பரப்புக்காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: பொ. இராமுப்பிள்ளை, வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு. (81636)

நல்ல நிலையிலுள்ள திண்டுக்கல் இரும்புப் பெட்டி **2 1/2 X2'** (அயன்சேவ்), அல்பாபெட்டி இத்துடன் இங்கிலீஸ் பெட்டியும் விற்பனைக்குண்டு. வெள்ளிக்கிழமை தவிர வார நாள்களில் பார்வையிடலாம். தொடர்பு: **S.K.**பிள்ளை, 311, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம் அல்லது சிவன் கோயில்வீதி, வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை. (81550)

## தவறிவிட்டது

நயினாதீவு 5ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை தெய்வானை என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல. 436050151**V**) 10-12-2000 அன்று யாழ். நகரில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து புதியநதியா நகை மாடம், கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (81644)

பன்னாலை, தெல்லிப்பழையைச் சேர்ந்த சின்னமணி விமலராணி ஆகிய எனது தே.அ. அட்டை (இல. 658605461**V**), விசேடஅடையாள அட்டை (இல. 0907008961) என்பன பேர்ஸுடன் 08-12-2000 அன்று மல்லாகம் மீன சந்தைக்கும் சங்கானைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் கீழ்க் காணும் முகவரியில் ஒப்படைக்கவும். M.சின்னமணி, தபாலகம், தெல்லிப்பழை. (81641)

54, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சிமியோன் யேசுதாசன் என்பவரின் தே.அ. அட்டை(இல.373602035**X**), விசேட அ.அ.(இல.0901000667), கந்தோர் அடையாள அட்டை என்பன ஆஸ்பத்திரி வீதிக்கும் பாங்சால் வீதிக்கும் இடையில் 11-12-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். (81642)

## மணமகன் தேவை

7இல் செவ்வாய், அவிட்டம் 1ஆம்பாத பட்டதாரி ஆசிரியைக்கு உள்ளூரில் தொழில்புரியும் மணமகன் தேவை. தொடர்பு: புதன், சனி தவிர்ந்த ஏனைய நாள்களில் "கஜமுகா திருமண சேவை", இல.29, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர். (81630)

## கண்டெடுக்கப்பட்டுள்ளது

ஐங்கரன் ஸ்ரோர்ஸ், 354, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்னும் ஸ்தாபனத்தில் உள்ளே இடைக்காடு, அச்சுவேலி என்னும் முகவரியைச் சேர்ந்த முருகுப்பிள்ளை பகீரதன் என்பவரது விசேட.அ.அட்டையும் ஸ்தாபனத்திற்கு வெளியே நிறுத்தப்பட்டிருந்த ஒரு துவிச்சக்கர வண்டியும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் ஆதாரம் காட்டி மேற்படி ஸ்தாபனத்தில் பெற்றுக் கொள்ளவும். (81646)

## ஆங்கில வகுப்புக்கள்

தனிப்பட்டவர்களுக்கு அல்லது சிறு குழுக்களுக்கு ஆங்கிலம்- தரம் 6 தொடக்கம் தரம் 11 வரை, ஆங்கில இலக்கியம் தரம் 9 தொடக்கம் தரம் 11 வரை, E.S.L. Paper Classes for G.A.Q and B.A தொடர்பு: 112, பிறவுண வீதி, யாழ்ப்பாணம். (81597)

## இசை வகுப்புக்கள்

எமது "நியூ வீணா கானம்" இசை மன்றில் சகல மேலைத்தேய கீழைத்தேய இசைவகுப்புக்கள் 15.12.2000 அன்று ஆரம்பம். தொடர்பு: 16/2, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் (மு.ப.8.00 முதல் பி.ப. 3.00 வரை) 60, வைமன் வீதி, நல்லூர். (பி.ப.4.00 -7.00வரை). (81610)

## வீடு தேவை

நால்வர் கொண்ட ஓர் ஆசிரியரின் குடும்பத்திற்கு வாடகைக்கு ஒரு வீடு தேவை. நல்லூர், கொக்குவில், ஆனைக்கோட்டை, நவாலி ஆகிய இடங்கள் விரும்பத்தக்கவை. தயவு செய்து நேரிலோ கடிதம் மூலமோ தொடர்புகொள்ளவும். **S.** டேவிட், 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம். (81647)

## அனுதாபத் தீர்மானம்

சாவகச்சேரி நகர சபையின் முன்னாள் தலைவர் சி.க.மயில் வாகனத்தின் மறைவுக்கு நகர சபையின் மாதாந்தக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்து பிரேரணை நிறைவேற்றப்பட்டது. நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் நகர சபையின் ஈ.பி.ஆர்.எல்.எவ்.உறுப்பினர் க. சிவராசா அனுதாபப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்த போது சபை அதனை அங்கீகரித்தது. (இ-117)

## பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒன்றுகூடல்

யாழ்ப்பாணம்,டிசெ.14

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பகல் 10.00 மணிக்கு ஆரியகுளம் சந்தி அருகே உள்ள புதிய உயர் கலைக் கல்லூரியில் இடம்பெறும்.

அனைத்து பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பகுதிநேர ஆங்கில ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது. (இ-ஒ)

## பயிற்சிக்காலக் கட்டணம்

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் பயிற்சியை மேற்கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கு பயிற்சிக்காலத்துக்குரிய பயிற்சிக் கட்டணத்தை விரைவில் பெற்றுக் கொடுப்பதற்கு ஈ.பி.டி.பி.யின் தென்மராட்சி அமைப்பாளர் சூ.சாள்ஸ் அலெக்ஸாண்டர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதற்கமைய இம்மாத இறுதிக்குள் முதல மூன்று மாதத்துக்குரிய கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

பயிற்சிக் கட்டணமாக மாதாந்தம் ரூபா 2 ஆயிரம் வீதம் பயிற்சியாளர்களுக்கு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

(இ-117)

## தேவை


தொலைத்தொடர்பில் அனுபவம் உள்ள பெண்பிள்ளை தேவை. யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது.

*தொடர்பு:*

**திருவள்ளுவர் தொலைத்தொடர்பு நிலையம்.**
**(யாழ்.மாநகர சபை அருகில்)**
**நல்லூர்.** (81657)

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 1925 - 02 - 13



மறைவு 2000 - 11 - 14

### அமரர் கந்தையா மயில்வாகனம்

(முன்னாள் நகரபிதா சாவகச்சேரி, தினகரன் பத்திரிகை நிருபர், அகில இலங்கை சமாதான நீதிவான்)

ஓடி மறைந்தது ஒருமாதம்
ஓடவில்லை உங்கள் நினைவு அப்பா,
கோடி தவமிருந்தாலும்
தேட முடியுமா உங்கள் போல.....

அன்னாரின் மறைவையொட்டி நேரிலும், பத்திரிகை மூலமும், துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கும்:

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**

நிரந்தர முகவரி:-
*கென்ஸ்மன் லேன்,*
*பச்சுவீதி,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி
*நீர்வேலி வடக்கு.*

(81659)

## சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்கம்

## அறிவித்தல்

மேற்படி சாவகச்சேரி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பணியாளர் நலன்புரிச் சங்க விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 16-12-2000 சனிக்கிழமை காலை 10 மணிக்கு அச்சுவேலியில் அமைந்துள்ள சங்க மண்டபத்தில் நடைபெற உள்ளது. அனைத்துப் பணியாளர்களையும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

-செயலாளர்

(81654)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

### செல்வி அ.சுகர்ணா

நாயன்மார்கட்டைச் சேர்ந்த கணேசா பந்தல் சேவை, S.T.A. திருமண சேவை ஆகியவற்றின் உரிமையாளரும் பிரபல சாத்துப்படி அமைப்பாளரும் மணவறை விற்பனையாளருமாகிய

**தில்லை அழகேஷக் குருக்கள்~அனுஷா**

தம்பதிகளின் புதல்வி **சுகர்ணா**

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (14-12-2000) வியாழக்கிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். சுகர்ணாவை இருபாலை பவானி அன்ரி, கவிதா (பிரியங்கா) அக்கா, கம்ஸா அக்கா ஆகியோர் பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்கவென கற்பகப்பிள்ளையாரைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றார்கள்.

தகவல்:
பா. அமுதன்.

*இருபாலை.*

(81649)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

திக்கம் மத்திய சனசமூக நிலையம், அல்வாய் மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் காப்பாளரும், கிராமோதய சங்க முன்னாள் தலைவரும், சிறந்த சமூக சேவையாளரும், பொலிகண்டி கந்தவனம் தேவஸ்தான திருப்பணிச் சபை இணைச்செயலாளரும், அல்வாய் வேவிலந்தை முத்துமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபை மற்றும் தேர்த் திருப்பணிச் சபை ஆகியவற்றின் நிர்வாகக் குழு உறுப்பினரும் இளைப்பாறிய சிரேஷ்ட தொழில்நுட்ப உதவியாளருமாகிய

### திரு.கதிர்காமத்தம்பி தங்கராசா

அவர்கள் அரசமைப்பு விவகார அமைச்சினால் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு 29-11-2000 அன்று யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்தமையை இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**கே.கே.ரட்ணம் ஸ்தாபனத்தாரும்,**
**தொழிலாளர்களும்,**
**கி.அமிர்தலிங்கம் குடும்பத்தினரும்.**

*திக்கம்*

(C/14290)

## மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்

வழக்கு இலக்கம்:- மணநீக்கம்/48

பாலசுப்பிரமணியம் நஞ்சிதச்செல்வம்
பெண் விஜயலட்சுமி, புன்னாலைக்கட்டுவன்.
- வழக்காளி -

எதிர்.

பாலசுப்பிரமணியம் நஞ்சிதச்செல்வம்,
புன்னாலைக்கட்டுவன்.
- எதிராளி -

### பின்னுறுதித் தீர்வை

இவ்வழக்கு 2000 ஆம் ஆண்டு மாசி மாதம் 3 ஆந் திகதி மல்லாகம் மாவட்ட நீதிபதி திருவாளர் இ.த.விக்னராஜா அவர்கள் முன்னிலையில் ஒருமுக விளக்கத்திற்கு எடுக்கப்பட்ட பொழுது, வழக்காளியும் அவரது பதிவுபெற்ற சட்டத்தரணி திரு.க.பரமராசா அவர்களும் மன்றில் சமுகமாயிருக்க, எதிராளியோ அல்லது அவரது பதிவுபெற்ற சட்டத்தரணியோ மன்றில் சமுகமாயிருக்காத காரணத்தினால் இவ்வழக்கு ஒருமுகவிளக்கத்திற்கு எடுக்கப்பட்டு வழக்காளி இவ்வழக்கில் அணைத்த துரட்சியில் கோரியவாறு பின்வருமாறு தீர்ப்பளிக்கப்படுகின்றது.

வழக்காளிக்கும் எதிராளிக்கும் இடையே 1990 ஆம் ஆண்டு ஆனி மாதம் 27ஆந் திகதி நிறைவேறிய பதிவுத் திருமணத்தை இரத்துச்செய்து வெற்றும் வெறுதுமானதாகத் தீர்ப்பளிக்கப்படுகின்றது.

இந்தப் பின்னுறுதித் தீர்வையின் அறிவித்தல் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து மூன்று மாதகால எல்லைக்குள் அக்கறையுள்ள ஆள் எவரேனும் இந்நீதிமன்றில் தோன்றி இப்பின்னுறுதித் தீர்ப்பாணையை ஏன் முற்றாக்கப்பட்டு முற்றான தீர்வையாக்கக் கூடாது எனத் தகுந்த காரணம் காட்டாவிட்டால் இது முற்றாக்கப்பட்டு முற்றான தீர்வையாக்கப்படும்.

2000-12-12

என்னால் வரையப்பட்டது.
எஸ்.பீ.சிவஞானம்
வழக்காளியின் பதிவுபெற்ற சட்டத்தரணி


(ஒப்பம்) பா.சுப்பிரமணியம்
மாவட்ட நீதிபதி
மல்லாகம்.

மன்றின் கட்டளைப்படி,
செ.விக்னேஸ்வரமூர்த்தி,
பதிவாளர்.

(81658)

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## HAPPY BIRTHDAY



### செல்வன் ஜெ.சாரங்கன்

### 14.12.2000

ஜெயரத்தினம் ஜெயதாஸ் சாரங்கன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார்.

நுணாவிலைச் சேர்ந்த ஜெயதாஸ் - பண்ணாகத்தைச் சேர்ந்த தமிழரச (அஞ்சு) தம்பதியரின் செல்வப் புதல்வனும் அமரர் ஆசிரியர் இ.நடராசா (ஏழாலை), சாவகச்சேரி பட்டினசபை முன்னாள் தலைவர் அமரர் ஜெயரத்தினம் ஆகியோரின் பேரனுமான செல்வன் சாரங்கன் தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (14-12-2000) வியாழக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் அன்பு அப்பா, அம்மா, ஆசை உதயன மாமாவுடன் மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

இவரை யாழ்.பண்ணாகத்தில் உள்ள அன்பு அம்மம்மா, சித்தி, சுவிஸில் இருக்கும் அப்பம்மா, சின்னமாமி, மாமா, பெரியமாமா, சின்னமாமா, அமெரிக்காவில் வசிக்கும் பெரியம்மா, பெரியப்பா, ஆசைக்குட்டி மாமா, சௌமாக்கா, நவீன் அண்ணா, பெரியப்பாமார், பெரியம்மாமார், ஜேர்மனியில் வசிக்கும் ஆசையப்பா, கனடாவில் இருக்கும் பெரியமாமி, மச்சாள், மச்சான்மார், இந்தியாவில் இருக்கும் கிருஷ்ணாஅங்கிள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பண்ணாகம் விசவத்தனை முருகன் திருவருளுடன், வழக்கம்பரை முத்துமாரி அம்பாள் அருளும், நுணாவில் சிவன் அருளும் பெற்று சகல சௌபாக்கியங்களும் நோயற்ற வாழ்வும் குறைவற்ற செல்வமும் பல்கலையும் கிடைக்கப் பெற்று பல்லாண்டு பல்லாண்டுகாலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*பண்ணாகம்,*
*சுழிபுரம்.*

திருமதி ஆ.நடராசா
(அம்மம்மா)

## மாணவியின்நிலை தொடர்ந்தும் கவலைக்கிடம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

திருநெல்வேலி பரமேஸ்வராச் சந்தியில் கடந்த 8 ஆம் திகதி இராணுவ அம்புலன்ஸ் வாகனம் மோதியதில் படுகாயமடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவியின் உடல் நிலை தொடர்ந்தும் கவலை அளிக்கும் நிலையில் இருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்தவரான செல்வி ஆனந்தராசா ராதிகா என்ற மாணவியின் உடலில் பல கண்டல் காயங்கள் காணப்படுவதாகவும் இடதுகை உணர்ச்சி அற்ற நிலையில் இருபதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவி யாழ்.போதனா வைத்தியசாலையின் அவசர சிகிசசைப் பிரிவில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகிறார்.

(ஐ-6-5)

## செல்வச்சந்நிதி ஆலய சிறப்பு மலர்

சாவகச்சேரி,டிசெ.14

சரித்திரப் பிரசித்தி பெற்ற அருள்மிகு தொண்டமனாறு செல்வச்சந்நிதி தேவஸ்தானத்தின் புராதன மகிமையை, அதன் தெய்வீகச் சிறப்பினை உள்ளடக்கிய ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய சிறப்புமலர் ஆலய பூசகர்களால் இவ்வருடம் வெளியிடப்பட்டுள்ளது.

இச்சிறப்பு மலரில் அதன் முகப்பு அட்டையில் செல்வச்சந்நிதி தேவஸ்தானத்தின் அழகுத் தோற்றம் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளது.

சிறப்பு மலரில் கடந்த காலங்களில் ஆலயத்தில் நடைபெற்ற விழாக்களில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மற்றும் ஆலயத்தின் வரலாறுகள்- வழிபாட்டு முறைமைகள், திருத்தல புராணங்கள், கடந்த காலங்களில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் ஆலயத்திற்கு ஏற்பட்ட சேதங்கள் போன்றனவும் இன்னும் பல விசேட அம்சங்களும் இடம்பெற்றுள்ளன.

(ஐ-31)

## HAPPY BIRTHDAY



### செல்வன் றஜீபன்

### 14.12.2000

ஜேர்மனியில் வசிக்கும் முகுந்தன் - திலகவதி தம்பதிகளின்

செல்வப் புதல்வன் **றஜீபன்**

தனது இரண்டாவது பிறந்ததினத்தை இன்று ஜேர்மனியில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அப்பா, அம்மா நோர்வே ரவிச்சித்தப்பா, மீசாலை அப்பப்பா, அப்பம்மா, வேணா அத்தை, கண்ணா அத்தை, கைதடி அம்மப்பா, அம்மம்மா, கொழும்பு மணியம் மாமா, மாமி, மச்சாள்மார், கௌரீசன், கௌசல்யன், மச்சான், கௌரிதா, மீசாலை சிதம்பரப்பிள்ளை அப்பப்பா, அப்பம்மா, அத்தைமார்கள் - அருந்தவம், மொழி, சுதன் சித்தப்பா, அத்தான் நேசவன், சிவகுமார், அப்பப்பா, அப்பம்மா, சித்திமார் - ரஞ்சி, நீலா, தனா, குட்டி, சோபா, மாமா பால்ராஜ் ஆகியோருடன் மற்றும் உற்றார், உறவினர்களும் மீசாலை ஞானவைரவர் அருளால் நீடூழி வாழ வாழ்த்துகின்றார்கள்.

தற்போதைய முகவரி:
*புலோலி மேற்கு, தம்பசிட்டி.*
நிரந்தர முகவரி:
*மீசாலை வடக்கு, கொடிகாமம்.* (81607)

அ.நடேசன்
(பேரன்)

# ஆறாவது மாத நினைவலைகள்



மலர்வு : 08.03.1975

உதிர்வு : 22.05.2000

## செல்வி கிருஷ்ணவேணி முருகேசு

(சாவகச்சேரி அம்பாள் பார்மஸி உரிமையாளரின் அன்பு மகள்).

நற்பண்புகள் யாவற்றையும் உமதேயாக்கி
நம்முடன் சிலகாலம் கனி மொழிகள் பேசி
நால் நிலத்தோருக்கும் பெருமைக்குரியவளாய் நின்று
மாதம் ஆறு கலைந்ததுவோ?
நாமகளின் இருப்பிடமாய் அன்று உலர்ந்த மலர் போன்ற
நின் திருவதனத்தைக் கண்ணுக்கு விருந்தாக்கினாய்!
நம் நெஞ்சுடனே என்றென்றும் உறவாடு பவளாய்
நாள்தோறும் நின் நினைவினிலே ~ நாம்

- குடும்பத்தினர்

நிரந்தர முகவரி:-
*458, இராச தோப்பு,*
*சாவகச்சேரி.*

தற்காலிக முகவரி:-
*சண்டிலிப்பாய் மேற்கு,*
*சண்டிலிப்பாய்.*

(81618)



37 லட்சம் ரூபா செலவில் பருத்தித்துறை நகரசபையால் புனரமைக்கப்பட்ட மீன்சந்தைக் கட்டடம் அண்மையில் பருத்தித்துறை முதலாம்குறுக்குத் தெருவில் திறந்துவைக்கப்பட்டது. பருத்தித்துறை நகரசபைத் தலைவர் வின்சன் கென்னடி திரைநீக்கம் செய்து மீன் வியாபாரத்தை ஆரம்பித்து வைக்கும்போது எடுத்த படங்கள். அருகில் நகரசபை உறுப்பினர்களும், ஊழியர்களும் காணப்படுகின்றார்கள். (படங்கள்: நெல்லியடிச் செய்தியாளர்)

# அபிவிருத்தித் திட்டங்களுக்காக குடாநாட்டுக்கு அதிக நிதி ஒதுக்கீடு

## அரச அதிபர் தெரிவிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.14

இன்றைய காலகட்டத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள் மற்றும் நகர சபைகளுக்கே அபிவிருத்தித் திட்டங்களுக்கு என அதிகளவு நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த நிதியைப் பயன்படுத்தும் அதிகாரம் உங்களுக்கே வழங்கப்பட்டுள்ளது. எனவே பிரதேச சபைகளின் உள்ளூராட்சி உதவியாளர்கள், செயலாளர்கள் ஆகிய நீங்கள் மக்களின் நீண்டகால அபிவிருத்தி கருதி நிதியைச் செலவழிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள், உள்ளூராட்சி உதவியாளர்கள் ஆகியோருக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப நாள் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் இவ்வாறு கூறினார்.

யாழ்.பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ரி.வி.கிருஷ்ணசாமி தலைமையில் இடம்பெற்ற இந்தப் பயிற்சி நெறியின் ஆரம்ப விழாவில் அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்ட அபிவிருத்திப் பணிக்கென 8 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

உரிய காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை உரிய நேரத்தில் மதிப்பீடு செய்து திட்டங்களை ஆரம்பிக்க உத்தியோகத்தர்கள் உஷாராக இருக்க வேண்டும்.

ஆனால் இன்று உத்தியோகத்தர்கள் திட்டங்கள் நடைபெறும் இடங்களுக்குச் சென்று அவற்றைப் பார்வையிடுவது இல்லை. இதனால் நீண்ட கால அபிவிருத்தித் திட்டங்கள் மூலம் முழுப் பயனையும் அடைய முடியாமல் போய்விடும் என்றார். (ம-185)

### நிரந்தர நியமனக் கடிதம்

வலி.மேற்கு.டிசெ14

சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள் 14 பேருக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் கூட்டுறவுத் திணைக்களத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-175)

### வீதி திருத்தம்

கொழும்புத்துறை,டிசெ.14

பல ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் இருந்த யாழ்.அன்னசத்திர ஒழுங்கை தற்போது யாழ்.வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் திருத்தப்பட்டு வருகிறது. (இ-30)

# மானிப்பாயில் உழவர் சந்தை நிறுவுமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய் டிசெ.14

அடுத்த ஆண்டு மேற் கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் மானிப்பாய்ப் பிரதேசத்தில் உள்ள விவசாயிகளின் நலன் கருதி அப்பகுதியில் உழவர் சந்தை ஒன்றை நிறுவவேண்டும் என்று மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

இச்சம்மேளனம் அடுத்த ஆண்டில் தனது பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைத் திட்டம் ஒன்றைத் தயாரித்து சண்டிலிப்பாய் பிரதேச செயலர் உடுவில் கமநல சேவை கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர், யாழ் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியலாளர் ஆகியோருக்கு கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ளது. (இ-135)

### இடைக்காலக் கொடுப்பனவு

வலி.மேற்கு,டிசெ.14

சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் கடமையாற்றும் நிரந்தர, தற்காலிக ஊழியர்கள் அனைவருக்கும் 400 ரூபா இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவு இந்த மாதம் வழங்கப்பட உள்ளது.

கடந்த பல மாதங்களுக்குரிய நிலுவைகள் எதுவும் வழங்கப்படமாட்டாது என்வும் இந்த மாதத்திற்கு உரிய 400 ரூபா இடைக்காலப் படி மட்டும் இந்த மாதச் சம்பளத்துடன் வழங்கப்பட உள்ளதாகவும் சங்கானை கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கத்தினர் தெரிவித்தனர். (இ-175)

### சிறுவர் நூலகம்

கொழும்புத்துறை,டிசெ.14

நல்லூர் பிரதேச சபையின் கொக்குவில் பொது நூலகத்தின் சிறுவர் பகுதி எதிர்வரும் ஜனவரி முதல் கொக்குவில் உப அலுவலகத்தின் ஒரு பகுதியில் இயங்க உள்ளது. (இ-30)

### கொடுப்பனவு

தென்மராட்சி டிசெ.14

கடந்த மாதம் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட தென்மராட்சி கல்வி வலய பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள். ஆகியோருக்கான கொடுப்பனவுகளை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்கள் நாளையறு தினம் காலை 10.00மணி தொடக்கம் 12.30 மணிவரை நெல்லியடி ம.ம.வி.யில் இயங்கும் வலய அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (இ-117)

### வெளிநடப்பு

கோப்பாய்ப் பிரதேச செயலக ஊழியர்கள் கடந்த 4 ஆம் திகதி வெளிநடப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதேச செயலகத்தில் புதிதாகக் கட்டப்பட்ட மலசலகூடத்தில் ஏற்பட்ட வெடிப்புக் காரணமாக அப்பகுதியில் துர்நாற்றம் வீசியதாகவும் அதனைத் தொடர்ந்தே ஊழியர்கள். கட்டடத்தை விட்டு வெளியேறி வெளிநடப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். (இ-72)


## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 1919 - 09 - 28

மறைவு 1990 - 12 - 14

**அமரர் சபாபதி நாகராசா**

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ இம்மாநிலத்தில்"

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**மனைவி,**
**மக்கள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

*'ராஜகிரி'*
*பொற்பதி லேன்,*
*கொக்குவில் கிழக்கு.*

(81533)




உரும்பிராய் இந்துக் கல்லூரியின் இரண்டாயிரமாம் ஆண்டுக்கான "வித்தியா" சஞ்சிகையின் வெளியீட்டுவிழா கல்லூரி மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. சஞ்சிகையை வெளியிட்டு வைத்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி சி.சிவலிங்கராசா, பிரபல சமூகசேவையாளரும் பொறியியலாளருமான லயன் இ. நடராசாவுக்கு முதற்பிரதியை வழங்குவதைப் படத்தில் காணலாம். கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதனும் படத்தில் காணப்படுகிறார்.

# சாவகச்சேரியில் டிறிபேக் கல்லூரி உட்பட பல பாடசாலைகள் சேதம்

சாவகச்சேரி,டிசெ.14

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் அப்பகுதிகளில் உள்ள பாடசாலைகளும் பலத்த சேதமடைந்துள்ளன என்றும் சாவகச்சேரி நகரில் அமைந்துள்ள சுமார் 125 வருடங்கள் பழைமை வாய்ந்த சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி பலத்த சேதத்துக்குள்ளான நிலையில் காணப்படுவதாகவும் அதன் அதிபர் மு.நாகேந்திரராஜா தெரிவித்தார்.

பாடசாலையில் ஒரு பகுதியான ஆரம்ப பிரிவுக் கட்டடங்கள் முன்னர் படையினரின் வசம் இருந்தன. மிகுதிப் பகுதியிலேயே பாடசாலை நடைபெற்றது.

எனினும் பாடசாலையில் ஆய்வு கூடம் உட்பட பிரதான வீதியின் ஓரமாகவுள்ள கட்டடங்கள் பலவும் சேதமடைந்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இப்பாடசாலை இந்த வருடம் 125ஆவது ஆண்டு விழாவைக் கொண்டாட பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் பாடசலை அபிவிருத்திச் சபை, பாடசாலை ஆசிரியர் சங்கம் ஆகியவை திட்டமிட்டிருந்தன.

இந்த விழாவையொட்டி விளையாட்டுப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள், கண்காட்சிகள் உட்பட மலரும் வெளியிடத் தீர்மானிக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இடம்பெற்ற போர் நடவடிக்கைகளால் பாடசாலை பின்னடைவைச் சந்தித்து விழா நிகழ்வும் பின்நோக்கித் தள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-31)

### சீரற்ற மின்விநியோகம்

அரியாலை,டிசெ.14

கோப்பாய், நீர்வேலிப் பகுதிகளில் அடிக்கடி மின்வெட்டு இடம்பெறுவதோடு மின்சாரம் மிகவலுக் குறைந்து காணப்படுவதாகப் பாவனையாளர்கள் தெரிவித்தனர்.(இ-17)

### மாநகரசபை சுகாதார, மராமத்து குழுக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.மாநகரசபையின் சுகாதாரக்குழு மற்றும் மராமத்துக குழுக்களின் கூட்டங்கள் இன்று காலை 9.30 மணிக்கு யாழ்.மாநகர சபையின் இந்து விடுதியல் நடைபெறவுள்ளன.

சுகாதாரக்குழுக் கூட்டம் குழுவின் தலைவர் கே.சின்னத்துரை தலைமையிலும், மராமத்துக்குழுக் கூட்டம் பிரதிமேயர் என்.ரவிராஜ் தலைமையிலும் நடைபெறவுள்ளன. (ம-5)

### ஆலய புனருத்தாரணத் திருப்பணி

கொழும்புத்துறை,டிசெ.14

யாழ். கந்தர்மடம் ரயில்பாதை வீதி அருள்மிகு ஸ்ரீ உதயநாக பூஷணி அம்பாள் திருக்கோயில் புனருத்தாரண திருப்பணி வேலைகள் தற்போது துரிதமாக இடம்பெற்று வருகின்றன.

எதிர்வரும் தை மாதத்தில் மஹா கும்பாபிஷேகவிழா நடைபெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-30)

# மாணவருக்கு கண் பரிசோதனை

வலிகாமம் தெற்கு,டிசெ.14

இணுவில், மானிப்பாய்வட்டம், சுன்னாகம் ஆகிய லயன்ஸ் கழகங்கள் இணைந்து தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபையின் அனுசரணையுடன் நடத்திய வசதியற்ற மாணவர்களுக்கான இலவச கண்பரிசோதனை முகாமின்போது 45க்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்களுக்குக் கண்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இணுவில் மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இக்கண்பரிசோதனையை யாழ். போதனா வைத்தியசாலை கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.குகதாசன் மேற்கொண்டார். இதன்போது ஏற்கனவே பாடசாலை அதிபர்கள் ஊடாக பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் கண்கள் பரிசோதிக்கப்பட்டன.

பார்வைக் குறைபாடு கண்டுபிடிக்கப்பட்ட 30 வசதி குறைந்த மாணவர்களுக்குத் தேவையான மூக்குக் கண்ணாடியை தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தான அறநிதிய சபையினர் வழங்க உள்ளனர்.

இதற்கென 30ஆயிரம் ரூபா தேவஸ்தான அறநிதியத்தில் இருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்த நாளான ஜனவரி 7 ஆம் திகதி மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படும்.

இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்ற இம்முகாமை லயன்ஸ் கழக மாவட்டத் தலைவர் (கழக விருத்தி) லயன் எஸ்.எஸ்.தங்கராஜா ஒழுங்கு செய்திருந்தார். (இ-152)

### பாடசாலைக்குக் குடிதண்ணீர், மின்சார வசதி

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் மாணவர்களின் நன்மை கருதி மின்சார இணைப்பு, நீர் விநியோகம் என்பன பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

மேற்படி பாடசாலையின் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் பெற்றோரும் இணைந்து 30 ஆயிரம் ரூபா செலவிலான குடிதண்ணீர் பைப்புகளையும், 28 ஆயிரம் ரூபா பெறுமதியான மின்சார இணைப்பு வேலைகளையும் பூர்த்தி செய்து கொடுத்துள்ளனர்.

மேலும், வடக்கு கிழக்கு மாகாண கல்வித்திணைக்களமும் வலிகாமம் கல்வித்திணைக்களமும் இணைந்து விஞ்ஞான பீடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப வேலைகளைத் தொடங்கியுள்ளன. சுமார் 18 லட்சம் ரூபா செலவில் இந்த விஞ்ஞானபீடம் அமைக்கப்படவுள்ளது. (இ-152)

# ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் விரத மகரஜோதி பெருவிழாவின்
# 18ஆம் ஆண்டு யாத்ரா பூர்த்தி விசேஷ பூஜா வழிபாடு - சிறப்பு மலர்

வழிபாடு சிறக்க இறைஞ்சுவோர்

**கிருபா நகை மாடம்**
337, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி சாயி துர்க்கா நகைமாடம்**
332,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நிலா நகை மாடம்**
280, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சிறி அமலா நகை மாடம்**
74/1, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கணேசா நகையகம் (பாபு)**
194,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**தயா நகைப் பூங்கா**
213, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பாலகிருஸ்ணன் கம்பி மெசின் தொழிலகம்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நிஷானந்தா ஜூவலர்ஸ்**
75, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**A.ஈஸ்வரன் நகைத்தொழிலகம்**
173/3,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


**நந்தினி நகை மாடம்**
218G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். T.P.-3121

**லகிசன் வீடியோ**
320, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**மாருதி புடைவையகம்**
1, பஜார் வீதி,
யாழ்ப்பாணம்.

**பட்டாபி படமாடம்**
64, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**சிவன் நகைமாடம்**
சிறி பில்டிங்,
மல்லாகம்.



ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மார்கழி மாதம் முதலாம் திகதி (16.12.2000) சனிக்கிழமை மாலை சர்வலோக அனுக்ரக கர்த்தாவாக, அனுக்ரகம் செய்து லோக பரிபாலனஞ் செய்து வரும் சபரிமலை ஸ்ரீ ஐயப்பஸ்வாமிக்கு 18 ஆம் ஆண்டு யாத்ரா பூர்த்தி பூஜை வழிபாடுகள் தாவடி மானிப்பாய் வீதியில் பத்ரகாளி அம்பாள் ஆலயத்திற்கு அண்மையிலமைந்த ஐயப்பஸ்வாமி (அ.இந்துதாசன்) அவர்கள் இல்லத்தில் பக்திபூர்வமாக நடைபெற இருப்பதால் ஐயப்ப பக்தர்கள் அன்றும் அதற்கு முதல்நாள் நடைபெறும் அன்னதானத்திலும் பங்குபற்றி ஸ்ரீ ஐயப்பன் திருவருள் பெற்று செல்வார்களாக.

15.12.2000 - வெள்ளிக்கிழமை காலை 9.00 மணி பிரம்பு அபிஷேக ஆராதனை, தொடர்ந்து பஜனை, தீபாராதனை, அன்னதானம்.

16.12.2000 - சனிக்கிழமை பி.ப 2 மணி கூட்டுப்பஜனை, நாதஸ்வர ராக ஆலாபனை, கணபதி ஹோமம சாஸ்தா பூஜை, சஹஸ்ர நாம ஆராதனை, தீபாராதனை, 18ஆம் படிப்பூஜை.

இணுவில் காயத்ரீபீடம் தர்மசாஸ்தா குருகுல அதிபர் பிரம்மஸ்ரீ தா.மகாதேவக்குருக்கள் தலைமையில் 21 குருமார்கள் பூஜைகளை நடத்திவைப்பார்கள்.

இப்படியான ஐயப்பன் பூஜை வெகு விமரிசையாக வருடந்தோறும் விதிமுறைப்படி நடைபெற்றுவருகின்றது.

இவ்வருடம் நடைபெறும் பூஜை ஐயப்பன் திருவருளால் விசேஷமாக நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளதால் ஐயப்ப பக்தர்கள் மட்டுமல்லாமல் எல்லா பக்தர்களும் வருகை தந்து ஐயப்பன் திருவருள் பெற்று எல்லாச் செல்வங்களோடும் சிறப்புற வாழ்வார்களாக!

சுபம்

*தாவடி மானிப்பாய் வீதி,*
*தாவடி.* - அ.இந்துதாசன்.

**சாருனி ஜூவல் கட்டிங் வேக்ஸ்**
இல.70, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

**சண்முகா ஆட்டோ ட்ரவல்ஸ்,**
கலைப்புலவர் வீதி,
யாழ்ப்பாணம்.

வழிபாடு சிறக்க இறைஞ்சுவோர்

**சிறிலக்ஷ்மி நகைமாடம்**
9/1, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

**சுவிஸ்லோ**
மெசின் கட்டிங் நகைத் தொழிலகம்
44/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம்.

**சுபலக்ஷ்மி நகைமாடம்**
பலாலி வீதி, உரும்பிராய் சந்தி,
உரும்பிராய்.

**தினேஸ் நகைத் தொழிலகம்**
53/4, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

**துர்க்கா நகைப்பூங்கா**
71, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

**முரளி வீடியோ சென்ரர்**
124, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.

**காயத்திரி நகைத் தொழிலகம் & வீடியோவிஷன்**
637, நாச்சிமார்கோயிலடி,
கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

**ஓம் சக்தி நகைமாடம்**
93, டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

**ஸ்ரீலங்கா புத்தகசாலை**
234, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம். T.P.- 2573

**விமலா ஸ்ரோஸ்**
275, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

**மெடிலாண்ட் ஆங்கில மருந்தகம்**
சங்கானை.
**மெடிலாண்ட் ஆங்கில மருந்தகம்**
மானிப்பாய்.

**இராஜாஜி கோல்ட் சென்ரர்**
பிரதான வீதி,
சங்கானை.

**மெலோடியஸ் மியூசிக்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சாணுகா நகைமாடம்**
200G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

### யாழ். பஸ் நிலையத்தில்

# மக்களுக்குத் தொல்லை கொடுத்த இருவர் பொலீஸாரினால் கைது

## சித்த சுவாதீனமற்றவர்களாம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.மத்திய பஸ் நிலையப் பகுதியில் பொது மக்கள் மீது கற்களை வீசித் தொல்லை கொடுத்த - சித்த சுவாதீனமற்றவர்களாகக் கருதப்படும் இருவர் யாழ். பொலீஸாரினால் கடந்த திங்களன்று கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட இருவரையும் பொலீஸார் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்.

இவர்களை தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி மனநோய்க்கு சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யுமாறு யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சி.ஆர்.மனோகரன், எம்.முத்துலிங்கம் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுப்படி தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ம-5-6)

## மீன்விலை வீழ்ச்சி

அரியாலை டிசெ.14

யாழ்ப்பாணம், கொட்டடி மீன் சந்தையில் கடந்த சில நாள்களாக மீன் விலை சற்று வீழ்ச்சி அடைந்துள்ளது.

தீவுப்பகுதியில் இருந்து அதிகளவு மீன் இந்தச் சந்தைப் பகுதிக்கு வந்து சேருவதே மீன் விலை வீழ்ச்சிக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-17)

## டெங்குக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்கப் பிரசாரம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

குடாநாட்டில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் தோற்றியுள்ள இவ்வேளையில் அதை மக்கள் மத்தியில் பரவாது தடுக்கும் முன்நடவடிக்கையாக பிரசார வேலையைச் செய்வதற்கு சனசமூக நிலையமொன்று முன்மாதிரியாகச் செயற்பட்டுள்ளது.

பிரசாரவேலையில் ஈடுபட்டிருக்கும் நவாலி பொதுச் சுகாதார பரிசோதகரின் நடவடிக்கைகளுக்கு உதவியாக நவாலி சென்.பீற்றர்ஸ் சனசமூக நிலையம் தமது செலவில் ஓட்டோ மற்றும் ஒலிபெருக்கிக்கருவிகள் என்பனவற்றை வழங்கி உதவி புரிந்துள்ளது.

இப்பொருள்களின் உதவியுடன் சுகாதாரப்பரிசோதகர் ச.பரமேஸ்வரன் அப்பிரிவு முழுவதும் கடந்த திங்களன்று பிரசாரப்பணியினை மேற்கொண்டார். (ம-15)

## கற்பித்தல் உபகரணங்கள் அன்பளிப்பு

வலிகாமம் மேற்கு,டிசெ.14

வலிகாமம் மேற்கு பிரதேசசெயலாளர் பிரிவுக்குட்பட்ட ஏழு முன்பள்ளிகளுக்கு யுனிசெவ் நிறுவனம் கற்பித்தல் உபகரணங்களை வழங்கியுள்ளது.

ஒவ்வொரு முன்பள்ளிக்கும் பதினையாயிரம் ரூபா பெறுமதியான கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. அராலி வடக்கு கனகரட்ணம் முன்பள்ளி, சங்கானை தொட்டிலடி கண்ணன் முன்பள்ளி, வட்டுக்கோட்டை கஜமுகன் முன்பள்ளி, சுழிபுரம் மேற்கு வீரபத்திரர் முன்பள்ளி, வட்டு தெற்கு சக்தி முன்பள்ளி, சுழிபுரம் கிழக்கு பாரதி முன்பள்ளி, பண்டத்தரிப்பு ஸ்ரீமுருகன் முன்பள்ளி ஆகிய முன்பள்ளிகளுக்கே கற்பித்தல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-175)

## விவசாயக் குழுக் கூட்டம்

யாழ்.மாவட்ட விவசாயக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரச அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக் கூட்டத்தில் மாவட்ட உணவு உற்பத்தித் திட்டம், கால்நடை அபிவிருத்தி, தென்னைச் செய்கை, உலக உணவுத் திட்டம் மற்றும் பெரும்போகச் செய்கை போன்ற விடயங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. (ம-5)

# வீட்டுத்தோட்டம் செய்ய ஊக்குவிப்பு

வலி.மேற்கு,டிசெ.14

தென்மராட்சியிலிருந்து இடம்பெயர்ந்து வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட இடங்களில் தங்கியுள்ளவர்களை வீட்டுத் தோட்டத்தில் ஊக்குவிப்பதற்கு பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதற்கு முன்னோடியாக வலிகாமம் மேற்கில் உள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வீட்டுத் தோட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

வட்டு வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் தங்கி உள்ளவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு வட்டு. வடக்கு கிராம உத்தியோகத்தர் பணிமனையிலும் -

வட்டு.தென்மேற்கு, வட்டு.தெற்கு கிராம உத்தியோகத்தர்கள் பிரிவுகளில்தங்கி உள்ளவர்களுக்கு வட்டு.தென்மேற்கு கிராம உத்தியோகத்தர் பணிமனையிலும் அதே தினம் பிற்பகல் 1.00 மணியளவில் கருத்தரங்குகள் நடைபெற உள்ளன. பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினர் இலவசமாக விதைகளை வழங்கவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-175)

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்னை மடியில் 15 - 10 - 1928



ஆண்டவன் அடியில் 14 - 11 - 2000

### அமரர் செல்லையா இராசையா

(பிரபல புகையிலை வியாபாரி)

எங்கள் குலவிளக்காய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்துவிட்ட குடும்பத் தலைவன் அமரர் செல்லையா இராசையா அவர்களின் மரணச் செய்தி கேட்டு உரிய நேரத்தில் உதவி புரிந்தோருக்கும், அனுதாபச் செய்தி தெரிவித்தவர்களுக்கும் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று (14.12.2000) வியாழக்கிழமை பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நடைபெறும். அத்தருணம் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*தாவடி வடக்கு,*
*கொக்குவில்.*

- குடும்பத்தினர்.

(81565)

---

# 25 ஆம் வருட நினைவு அலைகள்

தோற்றம் 21 - 06 - 1909



மறைவு 14 - 12 - 1975

### திருமதி இராசம் அன்னம்மா பிரான்சிஸ்

இருபத்தைந்து ஆண்டுகள் கடந்து விட்டன தாயே!
இரவும் பகலும் கண்விழித்து எம்மைக் காத்தாயே!
சரிவுகள் வந்தபோதும் கலங்காது நின்றாயே!
எம் இதயத்தில் இன்றும் நீ வாழ்கின்றாய் அம்மா!

உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பாசமுள்ள பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*"சோதி"*
*19, குருசோ வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(81600)

---

# வின்னக வாழ்வின் முதலாம் வருட நினைவலைகள்

பிறப்பு 30 - 09 - 1963



இறப்பு 26 - 11 - 1999

### அமரர் சி.அருள்கிருபைநாதன்

(மின் தொழில்நுட்பவியலாளர்)

திதி: 14-12-2000

அன்பின் திருவுருவே! பண்பின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே! அன்பு அருள் கிருபா!
எம் சிந்தை உள்ளளவும் உம் நினைவுகள்
என்றென்றும் நிலைத்திருக்கும்!
அந்தக் கண்ணீர் நினைவுகளோடு,
உங்கள் ஆத்மா சாந்திபெற எல்லாம் வல்ல
சங்கரத்தை பத்திரகாளியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**அம்மா, மனைவி, பிள்ளைகள்,**
**சகோதரர்கள்.**

தகவல்
*சி.சண்முகநாதன்*
***(C.E.B)***
*வட்டுக்கிழக்கு, வட்டுக்கோட்டை.*

(81413)

---

# எங்கள் நெஞ்சை நிறைத்த ஓராண்டு நினைவு

புவி நிலத்துள் எமக்கானது 1948 - 08 - 25



சிவகணத்துள் ஒன்றானது 1999 - 11 - 25

### திருமதி புஷ்பராணி சிவராசா

திதி 14-12-2000

வைத்தபொருள் மறந்திடலாம்! வைத்தஇடம் மறந்திடலாம்!!
எத்தனையோ கற்றுவிட்டோம்! கற்றதையும் மறந்திடுவோம்!!
ஆனாலும் இங்கு தங்கள் அணைப்பிலே வளர்ந்த எங்கள்
யாராலும் உங்களையோ மறந்திடவே முடிந்திடாது!
வான்ஆளும் தெய்வவீட்டில் ஒளியான எம்விளக்கே!
நாவாலும் சிந்தையாலும் உங்களையே நிதம் நினைப்போம!

**கண்வர் - பிள்ளைகள்,**
**தாய், சகோதரர்கள், சகோதரிகள்,**
**மருமகள், மைத்துனர்கள்,**
**மைத்துனிகள், பேரன்,**
**பெறாமக்கள்.**

*6ட்ளாக ஒழுங்கை, திருநெல்வேலி.*

(81606)

# போக்குவரத்து விதிகளையே அறியாத இளம் தலைமுறை!

நாள்தோறும் பல வீதி விபத்துக்கள் இடம்பெறுகின்றன. விபத்துக்களால் பலர் உயிர் இழக்கிறார்கள். பலர் ஊனமடைகிறார்கள். பலர் தொழில் செய்யும் ஆற்றலை இழக்கிறார்கள். பலர் கல்வி கற்கும் வாய்ப்பை இழக்கிறார்கள் - வைத்தியர்களுக்குப் பற்றாக்குறை நிலவும் யாழ். போதனா வைத்தியசாலையில், விபத்துக்கள் காரணமாக அநேகர் காயங்களுடன் அனுமதிக்கப்படுகின்றனர்.

**மக்கள் அரங்கம்**

இந்த நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதில் பல வைத்தியர்கள் ஈடுபடுவதால், ஏனைய நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிப்பதற்குப் போதுமான வைத்தியர்கள் இல்லாத நிலை ஏற்படுகிறது. நோயாளிகளைப் பல மணி நேரம் சிகிச்சைக்காகக் காத்திருக்க வைக்கிறது. சில வேளைகளில் சிகிச்சை பெறமுடியாமல் திரும்பிச் செல்லவும் வைக்கிறது. ஆகவே வீதி விபத்துக்களால் சமூகம் முழுவதுமே அவலத்துக்கு உள்ளாகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

**ச.ஆ.கோபாலமூர்த்தி**

பெரும்பாலான வீதிவிபத்துக்கள் மோட்டார் சைக்கிள்களால் ஏற்படுகின்றன. சந்திகளில் வீதியைக் கடக்கும் போதும் சந்தியால் திரும்பும் போதும் இடதுபுறமாகவே செல்ல வேண்டும். வீதியைக் கடக்கு முன், நின்று போக்குவரத்தைக் கவனித்து, இடப்புறத்திலும் வலது புறத்திலும் கணிசமான தூரத்தில் வாகனங்கள் வராவிடில் மாத்திரமே கடக்க வேண்டும் அல்லது திரும்பவேண்டும் என்ற முக்கியமான போக்குவரத்து விதிகளை சைக்கிளிலும், மோட்டார் சைக்கிளிலும் செல்வோர் கடைப்பிடிப்பதில்லை. சந்தியைக் கடக்கும் போது வாகனத்தை நிறுத்தாது வாகனத்தின் வேகத்தைக் குறைத்துக் கொண்டு முன்னாலுள்ள வீதியில் செல்லும் வாகனங்களுக்கு இடையே நுழைகிறார்கள் அல்லது வீதியை கடக்கத்தக்க அளவுக்குப் போக்குவரத்துக் குறையும் வரை வலது புற ஓரத்தால் செலுத்துகிறார்கள் இதனால் போக்குவரத்து விதிகளுக்கு அமைவாக இடதுபுறத்தால் வரும் வாகனங்களில் மோதுகிறார்கள். சந்திகளுக்கு அண்மையில் பாதசாரிகள் கடவைகள் அமைக்கப்படாததால் பாதசாரிகளும் வீதியைக் கடக்கும்போது விபத்துக்குள்ளாகிறார்கள்.

சைக்கிளில் பலர் சமாந்தரமாகச் செல்லல், சைக்கிளின் வேகத்தைத் திடீரெனக் குறைக்கும் போதும், திடீரென சைக்கிளை நிறுத்தும்போதும் அதற்குரிய சைகையைக் காட்டாது விடுதல், பிரேக் இல்லாத சைக்கிளைப் பயன்படுத்துதல் போன்ற தவறுகளைச் செய்வதால் சைக்கிள் ஓட்டிகள் சந்திகள் அல்லாத இடங்களிலும் விபத்துக்களைச் சந்திக்கிறார்கள். ஒறுவாயாக இடிந்து காணப்படும் வீதிகளின் ஓரங்கள் திருத்தப்படாது விடப்படுவதால் ஏனைய வாகனங்கள் முந்திச் செல்வதற்கு இடம்கொடுப்பதற்காக வீதியோரத்திற்குச் சைக்கிளைச் செலுத்தும் போது குலுக்கத்துக்கு உள்ளாகி விழும்போது முன்னால் வரும் வாகனங்கள் சைக்கிளோட்டிகளை நசித்து விடுகின்றன.

சில வருடங்களாகப் போக்குவரத்து விதிகள் அமுல் நடத்தப்படுவது யாழ்ப்பாணத்தில் முறையாக கண்காணிக்கப்படவில்லை. இதனால் போக்குவரத்து விதி என்ற ஒன்று இருப்பதையே அறியாத இளம் தலைமுறை ஒன்று உருவாகி விட்டது.

தொண்டர் நிறுவனங்களையும், சாலை விதிகளைக் கற்ற சாரதிகளை வைத்திருக்கும் நிறுவனங்களையும் பொதுமக்களுக்கு சாலை

## விபத்துக்கள் அதிகரிக்க இதுவும் ஒரு காரணம்

விதிகளை போதித்து விபத்துக்கள ஏற்படுவதை தடுக்கும் நடவடிக்கையில் ஈடுபடுமாறு உதயன் பத்திரிகை வாயிலாக கேட்டிருந்தேன். இலங்கை போக்குவரத்துச் சபையின் கோண்டாவில் டிப்போவின் பொறுப்பதிகாரி தன்னிடம் உள்ள சாரதி பயிற்றுநர்களை பாடசாலைகளுக்கு அனுப்பி மாணவர்களுக்கு போக்குவரத்து விதிகளை போதிக்க தயாராக இருப்பதாக உதயன் வாயிலாக அறிவித்திருந்தார். இந்த அறிவித்தலை அதிபர்கள் வாசிக்கவில்லை போல் இருக்கிறது.

போக்குவரத்து விதிகளைக் கற்று, சாரதி அனுமதிப்பத்திரம் பெற்ற சாரதிகளை வைத்திருக்கும் இலங்கைப் போக்குவரத்துச் சபையினது பஸ்களும், தனியார் பேருந்துகளும் பரமேஸ்வராச் சந்தியில் நிறுத்தப்பட்டு, அதில் பிரயாணிகளை ஏற்றுவதற்கு நெடுநேரம் தரித்திருந்து போக்குவரத்துக்கு இடைஞ்சல் செய்கின்றன. இது வேதனை தரும் விடயம் ஆகும். இப்பேருந்துகளை பிள்ளையார் கோயிலுக்கும் ஆலடிச்சந்திக்கும் இடையில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் நிறுத்தி பயணிகளை ஏற்றுவதற்கு போக்குவரத்துச் சபை அதிகாரிகளும், தனியார் பேருந்துக் கழகத்தினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொண்டர் நிறுவனங்களும் சமய நிறுவனங்களும் போக்குவரத்து விதிகள் பற்றிய போட்டிகளை நடத்தி பரிசில்களை வழங்கி, மாணவர்களுக்கு போக்குவரத்து விதிகளை கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். வீதிகளை பராமரிக்கும் நிறுவனங்கள் வீதியின் ஓரங்களில் ஒறுவாய், இடிவாய் இல்லாமல் சீர் செய்ய வேண்டும். பாடசாலைகளின் அதிபர்கள் போக்குவரத்துச்சபை முகாமையாளர் நீட்டும் உதவிக்கரத்தை பற்றி மாணவர்கள் போக்குவரத்து விதிகளை அறிய வழிவகுக்க வேண்டும். அனைவரும் இணைந்து முயன்றால் விபத்துக்களைத் தடுக்கலாம். ★

## அடிக்கல் நடப்பட்டது

காரைநகர்,டிசெ.14

ஊர்காவற்றுறை சிவன் கோயில் புனர்நிர்மாண வேலைகளுக்கான அடிக்கல் நடும் வைபவம் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் அடிக்கல்லை நட்டு வைத்தார்.

இந்த ஆலயத்தின் புனர்நிர்மாண வேலைகளுக்காக வடக்கின் மீள்குடியேற்ற புனர் வாழ்வு, புனரமைப்பு அதிகார சபை பத்து இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளது.

(ம-73)

## தவறான கருத்துக்களே தற்கொலைக்குக் காரணம்

### கருத்தரங்கில் உரை

காதலில் தோல்வியுறும் ஆண் அல்லது பெண் தற்கொலை செய்து கொள்வதைத் தவிர வேறுவழி எதுவும் இல்லை என்ற தவறான கருத்தை இன்றைய இளைஞர் யுவதிகள் மத்தியில் மின்னியல் ஊடகங்களும் திரைப்படங்களும் பத்திரிகை ஊடகங்களும் பரப்பி வருகின்றன.

இவ்வாறு "தற்கொலை" தொடர்பான கருத்தரங்கில் உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா.ஜெயராஜா தெரிவித்தார்.

மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் அருட்திரு ஏ.ஏ. போல் தலைமையில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்தக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது, இன்றைய கால கட்டத்தில் இலங்கையில் தற்கொலைகள் அதிகரிப்பதற்குக் காரணம், இளைஞர் யுவதிகள் மத்தியில் காதலுக்குக் கொடுக்கப்படும் அளவுக்கு மிஞ்சிய முக்கியத்துவமே ஆகும்.

இதனால்தான் இன்றைய இளைஞர், யுவதிகள் காதலில் தோல்வியுற்றவுடன் அல்லது காதலுக்கு பெற்றோர் தடை போட்டவுடன் நஞ்சுப் போத்தலைக் கையில் எடுக்கின்றனர்.

இத்தகைய நிலைமை உருவாக தற்காலத்தில் வெளிவரும் திரைப்படங்களும், மின்னியல் ஊடகங்களும் முக்கிய பங்காற்றுகின்றன.

இந்த நிலை மாற வேண்டும். மாற்றப்பட்டாலேயே மனிதகுலம் தற்கொலையின் பிடிக்குள் இருந்து மீள முடியும் - என்றார்.

தற்காலிக துணை விரிவுரையாளராகிய எஸ்.ஸ்ரீபன் தனது உரையில், பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது படிப்பு விடயத்தில் அதிக பாரத்தை சுமத்துகின்றனர். இதனால் வருத்தப்படும் மாணவனது உளவியல் தாக்கத்தைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை.

மாறாக தமது பிள்ளைகளிடம் தொடர்ந்தும் அதிகமாக எதிர்பார்ப்பதும் பெற்றோரது எதிர்பார்ப்பை பிள்ளைகளால் நிறைவேற்ற முடியாமல் போனதும் அதிகமாகப் பேசுவதும் பிள்ளைகள் தற்கொலை புரிவதற்கு அதிக தூண்டுதலாக அமைந்து விடுகின்றன. இது தொடர்பாக பெற்றோர் கவனம் எடுக்க வேண்டும் - என்றார்.

இந்தக் கருத்தரங்கிற்கு தென் இந்தியத் திருச்சபை ஆயர் அதி. வணக்கத்திற்குரிய கலாநிதி - எஸ். ஜெபநேசன் ஆசியுரை வழங்கினார்.

(இ-6)

## உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு 1270 தார்ப் பீப்பாய்கள் ஒதுக்கீடு

யாழ்.மாவட்டத்தில் உள்ள 8 உள்ளூராட்சி நிறுவனங்களின் வீதி அபிவிருத்திப் பணிகளுக்கு என ஆயிரத்து 270 தார்ப்பீப்பாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

வடமராட்சி, தென்மேற்கு பிரதேச சபை- 250, வல்வெட்டி நகரசபை- 150, பருத்தித்துறை ந.சபை - 175, வலி.வடக்கு பி.சபை - 75, வலி. மேற்கு பி.சபை - 120, வலி.தென் மேற்கு பி.சபை - 50, பருத்தித்துறை பி.சபை - 300, நல்லூர் பி.சபை- 100, ஆகிய 8 பிரதேச சபைகளுக்கே அடுத்த ஆண்டு அபிவிருத்தி வேலைகளுக்கென இந்தத் தார்ப் பீப்பாய்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை-

ஒதுக்கப்பட்ட ஆயிரத்து 270 தார்ப் பரல்களில் 472 பரல்கள் மட்டும் ஏற்கனவே மேற்படி உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும் -

உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வழங்கப்பட வேண்டிய எஞ்சிய தார்ப்பரல்களுக்கான நிதியினை உடன் விடுவிக்குமாறு பி.உ.உதவி ஆணையாளர் ரி.வி.கிருஸ்ணசாமி பிரதேச சபை, நகரசபை செயலாளர்களைக் கேட்டுள்ளார்.

(ம-185)

## வீரப்பன் சகாக்கள் 750 பேர் படகுகள் மூலம் வன்னிப் பகுதிக்கு

கொழும்பு,டிசெ.14

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பனின் குழுவைச் சேர்ந்த 750 பேர் தமிழ்நாட்டிலிருந்து தப்பி படகுகள் மூலம் இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குள் நுழைந்திருப்பதாக புலனாய்வுப் பிரிவை மேற்கோள் காட்டி லக்பிம சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

தனது குழுவைச் சேர்ந்த உறுப்பினர்களை விடுதலைப் புலிகள் பாதுகாக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளுக்கும் வீரப்பனுக்கும் இடையில் ஏற்கனவே எட்டப்பட்ட இணக்கத்தின்படியே அவர்கள் வன்னிக்குச் சென்றுள்ளதாகவும் -

இந்த விடயம் தொடர்பாக விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் -

அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## யாழ். பல்கலைக்கழகத்தில் அன்னை சாரதா ஜெயந்தி தினவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.14

யாழ்.பல்கலைக்கழக ஆன்மீக நாட்டமுள்ள மாணவர்களால் நடத்தப்படும் அன்னை சாரதாதேவி ஜெயந்தி தின விழா எதிர்வரும் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி முதல் பல்கலைக் கழக கைலாசபதி கலை அரங்கில் நடைபெற உள்ளது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும் நிகழ்வில் 1893ஆம் ஆண்டு சர்வமத சபையில் சுவாமி விவேகானந்தர் ஆற்றிய முதலாவது உரை மீண்டும் ஒலிபரப்பாகும்.

'இராமகிருஷ்ண பரமஹம்சரின் கல்விச் சிந்தனைகள்', 'இந்து சமய வளர்ச்சிக்கு அன்னையின் பங்களிப்பு' ஆகிய தலைப்புகளில் சொற்பொழிவுகளும் 'குறும்பால் எனை மயக்கும் கோபாலர்' என்ற தலைப்பில் தனி நடனமும், பட்டிமன்றமும் இடம்பெறும்.

(ம-15)

## நிரந்தர நியமனம்

தென்மராட்சி,டிசெ.14

தென்மராட்சி பிரதேச செயலகத்தில் ஆறுமாத கால பயிற்சியைப் பூர்த்தி செய்த 36 சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் கடந்த திங்கட்கிழமை கரவெட்டி பிரதேச செயலகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

தென்மராட்சி பதில் பிரதேச செயலர் செ.சிறிநிவாசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி. அமைப்பின் தென்மராட்சி அமைப்பாளர் சூ.சாள்ஸ் அலெக்ஸாண்டர் நியமனக் கடிதங்களை வழங்கினார்.

(ம-117)

## வறிய குடும்பங்களுக்கு வளர்ப்பு ஆடுகள் அன்பளிப்பு

வலி.தென்மேற்கு,டிசெ.14

வலி.தென்மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பங்களுக்கும் ஆதரவற்ற விதவைகளுக்கும் ஈ.பி.டி.பி. மானிப்பாய்த் தொகுதி அமைப்பாளர் வெலிச்சோர் அன்ரன் ஜோன்சன் அண்மையில் வளர்ப்பு ஆடுகள் வழங்கியுள்ளார்.

ஒவ்வொரு விவசாய சம்மேளன பிரிவில் இருந்தும் இருவர் வீதம் தெரிவு செய்யப்பட்டு ஆடுகள் வழங்கப்பட்டன.

இதேவேளை-

காக்கைதீவு மீனவர்களுக்கு மீன்பிடி வலை வழங்கி அவர்களது நாளாந்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரண்டு திட்டங்களும் பிரமாண அடிப்படையிலான நிதியில் இருந்து மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ம-185)

## சாயி சமித்தி கூட்டம்

வடமராட்சி,டிசெ.14

தென்மராட்சி சாயி சமித்தியின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணம் புதிய அத்தியடி வீதியில் உள்ள 65ஆம் இலக்க இல்லத்தில் நடைபெறும். (ம-173)

## வல்லைப் பாலம் தற்காலிகமாக திருத்தப்பட்டு வருகின்றது

யாழ்ப்பாணம்,டிசெ.14

கடந்த கால வன்செயல்களினால் சேதமடைந்த வல்லைப் பாலம் தற்காலிகமாகத் திருத்தப்பட்டு வருகிறது.

150 ஆண்டு காலம் பழைமை வாய்ந்த இப்பாலம் கடந்த 1990 ஆம் ஆண்டின் பின்னர் இடம்பெற்ற விமானக் குண்டு, ஷெல் வீச்சுச் சம்பவங்களினால் சேதமடைந்திருந்தது.

சேதமடைந்த இப்பாலம் கடந்த 5ஆண்டு காலமாகத் திருத்தப்படாது மண், கற்கள் போடப்பட்டு வீதி ஆக்கப்பட்டு போக்குவரத்துச் செய்யப்பட்டது.

இப்பாலத்தினூடாகப் போக்குவரத்துச் செய்யும் வாகனங்கள் கடல் ஏரிக்குள் அடிக்கடி விழுந்து வந்தமையால் கல், மண் போட்டு நிரப்பப்பட்ட பாலத்துடன் ஒட்டிய வீதி அகலமாக்கப்பட்டு மண் அணைகள் போடப்பட்டு வருகின்றன. இத்தற்காலிக திருத்தத்தினால் வாகனங்கள் கடல் ஏரிக்குள் வீழாது போக்குவரத்துச் செய்யக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது. (இ-15)

யாழ்.லயன்ஸ் கழகம் நடத்தும்
இலவச கண் பரிசோதனை

இடம்: யாழ் வைத்திய நிலையம்.
166, முதலாம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.
(வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக)

காலம்: 15-12-2000 வெள்ளிக்கிழமை
நண்பகல் 12 முதல் பிற்பகல் 2 மணி வரை

பரிசோதிப்பவர்:
லயன் A.ஜெயக்குமாரன்.
P.J.பர்னான்டோ ஸ்தாபனம்.

சேவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் மேற்படி வைத்திய சாலைப் பொறுப்பதிகாரியிடம் தமது பெயரினை முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளவும்.

மு.குறிப்பு: பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும்.

தலைவர்,
யாழ்.லயன்ஸ் கழகம்.

(C/14291)

# சித்திரவதைகள் குறித்து சாட்சியம் அளிக்க யாழ். மக்கள் பின்னடிப்பு

## விசாரணைக்கு வந்த அதிகாரிகள் குழு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 14
படையினரின் காவலில் இருந்த சமயம் இடம்பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைகள் குறித்து சாட்சியங்கள் அளிப்பதில் யாழ்ப்பாண மக்கள் அக்கறையின்றி இருக்கிறார்கள் என்று யாழ். பொலீஸ் நிலையத்தில் இது தொடர்பான வாக்கு மூலங்களைப் பதிவு செய்யும் குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலீஸார் தெரிவித்தனர்.

அவர்கள் இது தொடர்பாக மேலும் கூறியதாவது:-

படையினரின் காவலில் இருந்த போது இடம்பெற்ற சித்திரவதைகள் தொடர்பாக மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவிடம் புகார் செய்பவர்கள் தற்போது அது தொடர்பாக வாக்கு மூலங்களைப் பதிவு செய்யும் போது ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் இல்லை.

யாழ்ப்பாணத்தில் இருந்து இது தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்ட 14 சம்பவங்கள் தொடர்பாக வாக்கு மூலங்களைப் பதிவு செய்வதற்கு நாம் ஏற்பாடு செய்த போதும் 6 பேர் மட்டுமே இது வரை சாட்சியம் அளித்துள்ளனர்.

வாக்கு மூலங்களைப் பதிவு செய்து போதிய சாட்சியங்களுடன் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு உதவும் நோக்குடன் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் இத்தகைய வாக்கு மூலங்களைப் பதிவு செய்து வருகின்றனர்.

வாக்கு மூலங்களின் அடிப்படையில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்பான குற்றச் சாட்டுகளைச் சட்டமா அதிபரிடம் சமர்ப்பித்த பின்னர் சட்டமா அதிபர் அவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வார்.

இத்தகைய வாக்குமூலங்கள் யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல கிழக்கு மாகாணம் மற்றும் தென்னிலங்கையிலும் பதிவு செய்யப்படுகின்றன.

இப்படி அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

படையினரின் காவலில் இருந்தபோது இடம்பெற்ற சித்திரவதைகள் குறித்து யாழ்ப்பாணத்தில் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்வதற்குக் கொழும்பிலிருந்து 4 பேர் அடங்கிய புலனாய்வுக் குழு யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இந்தக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை தமது விசாரணைகளை ஆரம்பித்து நேற்று வரை நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

நேற்றுச் சாட்சியமளிக்க எவரும் சமுகமளிக்காத காரணத்தினால் நேற்று மாலையே இந்தக் குழுவினர் கொழும்பு திரும்பினர். (ஐ-5)


## நன்றியுடன் பாராட்டுகின்றோம்

புலோலி, சாரையடி புனித ஆரோக்கிய அன்னை (வேளாங்கண்ணி) ஆலயத்துக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கீட்டு நிதியை வழங்கி ஆலயத்துக்கு வேண்டிய ஒலி அமைப்பு சாதனங்களைத் தந்துதவிய ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி அமைப்பாளரும், கௌரவ செயலாளர் நாயகமும், வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு தமிழ் விவகார, இந்து கலாசார அலுவல்கள் அமைச்சருமான–

K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்களையும்,

யாழ். மாவட்ட அமைப்பாளரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமாகிய

V.K. குகேந்திரன் (ஜெகன்) அவர்களையும்,

பிரதேச சபைத் தலைவர்

சிறிரங்கேஸ்வரன் அவர்களையும்,

தென்மராட்சி அமைப்பாளர்

சாள்ஸ் (அலெக்சாண்டர்) அவர்களையும

நன்றியோடு பாராட்டுவதோடு இறையருள் அவர்களின் பணியில் நிறைவாகக் கிடைக்க ஆசிக்கின்றோம்.

– பங்கு மக்கள்

புனித ஆரோக்கிய அன்னை
ஆலய திருச்சபை,
சாரையடி. (81655)


# மேல் நீதிமன்ற நீதிபதி ஜனவரியில் யாழ். வருவார்

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ். மாவட்டத்தில் மேல் நீதிமன்றத்தை மீண்டும் ஆரம்பிக்கும் பொருட்டு மேல் நீதிமன்ற நீதிபதி கே. பி. எஸ். வரதராஜா ஜனவரி மாத முற்பகுதியில் யாழ்ப்பாணத்துக்கு வருகை தரவுள்ளார்.

இவர் வருகை தந்த பின்னர் ஜனவரிமாத நடுப்பகுதியில் மேல் நீதிமன்ற அமர்வுகள் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மேல் நீதிமன்றத்துக்கு நீதிபதி ஒருவர் நியமனம்செய்யப்பட்டும் நீதிமன்ற அமர்வுகளை நடத்துவதில் தாமதம் ஏற்பட்டது.

மேல் நீதிமன்றம் இயங்குவதற்கான கட்டட வசதியை உரிய காலத்தில் பெறமுடியாமையினாலேயே காலதாமதம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5)

# வீடுகளை விட்டு வெளியேற மறுக்கும் முன்னாள் எம். பிக்கள்

## சட்டநடவடிக்கைக்கு அரசு தயாராகிறது

கொழும்பு, டிசெ. 14
நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான வீட்டுத் தொகுதியில் தொடர்ந்தும் தங்கியுள்ள முன்னாள் உறுப்பினர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

தொடர்ந்தும் அங்கு தங்கியிருக்கும் இவர்களிடம் வீடுகளைக் கையளிக்குமாறு பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதும் இதுவரை அவர்கள் அவற்றைக் கையளிக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வீடுகளை வழங்க முடியாதுள்ளது. வீடுகளைத் திருப்பி ஒப்படைக்காத முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீது சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கென சட்டமா அதிபரின் ஆலோசனையும் பெறப்பட்டுள்ளது. (ஐ-10)

# கலட்டி இளைஞன் விடுவிப்பு

வலி. வடக்கு, டிசெ. 14
கலட்டியில் உள்ள வீட்டில் வைத்து கைது செய்யப்பட்ட ஐயாத்துரை கேதீஸ்வரன் என்ற இளைஞர் நேற்று நண்பகல் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வீட்டிற்கு வந்தஇராணுவத்தினர் இவரைக் கைது செய்து 512ஆவது படைப்பிரிவுத் தலைமையகத்தில் தடுத்து வைத்திருந்தனர் பின்னர் நேற்று இப்பகுதி கிராம அலுவலர் நா. நவரத்தினராசா முன்னிலையில் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

அவரிடம் இருந்து பெறப்பட்ட பொருள்களும் மீளக் கையளிக்கப்பட்டன. (ஐ-86)

# பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் விசேட பொதுக் கூட்டம் இன்று காலை 9 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் முக்கியமான சில முடிவுகள் எடுக்க வேண்டி இருப்பதால் அனைத்து பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு மாணவர் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார். (ம-6)

# அநாதரவாகக் காணப்பட்ட சைக்கிள்

யாழ்ப்பாணம், டிசெ. 14
யாழ். சிவன் கோயில்– கன்னாதிட்டி வீதியில் பூட்டிய கடை முன்பாக அநாதரவாகவிடப்பட்டிருந்த லுமாலா சைக்கிள் ஒன்று கடந்த திங்கட்கிழமை இரவு கோல்டன் ஈகிள் பாதுகாப்புச் சேவைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சைக்கிளை எவரும் உரிமை கோராததால் நேற்று அது யாழ். பொலீஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-3)


# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்

## 2001 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

20-11-09 ஆம் திகதிய 'உதயன்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி நிபந்தனைகளுக்கு அமைய பின்வரும் சந்தை, இறைச்சிக் கடைகள், கடைகள் ஆகியவற்றின் குத்தகைக்கான கேள்விகள் 2001-01-01 ஆம் திகதி தொடக்கம் 2001-12-31 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு மீளவும் கோரப்படுகின்றன.

அட்டவணை

| குத்தகை விவரம் | மாத வாடகை | கேள்விப் பத்திரப் பணம் | கேள்வி வைப்புப் பணம் | ஆகக்குறைந்த மதிப்பீட்டுத் தொகை |
|---|---|---|---|---|
| (1) சுன்னாகம் உப அலுவலகம் | | | | |
| 1. சுன்னாகம் ஆட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1505/- | 50000/- |
| 2. கருவாட்டுக் கடை இல. 4 | 60/- | 50/- | 100/- | 5000/- |
| 3. கருவாட்டுக் கடை இல. 6 | 60/- | 50/- | 100/- | 3500/- |
| 4. கருவாட்டுக் கடை இல. 7 | 60/- | 50/- | 100/- | 3000/- |
| (2) உடுவில் உப அலுவலகம் | | | | |
| 1. இணுவில் சந்தை, | — | 100/- | 1000/- | 45000/- |
| 2. இணுவில் மாட்டிறைச்சிக் கடை | 100/- | 150/- | 1500/- | 59000/- |
| 3. சந்தை உட்புறக் கடைகள் இல. 17 (சுன்னாகம்) | 375/- | 200/- | 1000/- | 20000/- |

கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி:– 2000. 12. 19 பி. ப. 2 மணி வரை

கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:– 2000. 12. 20 பி. ப. 2 மணி வரை

கேள்வி திறக்கப்படும் திகதி:– 2000. 12. 20 பி. ப. 3 மணி

ஆகக்குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான தொகை கோரப்படின் கேள்விகள் நிராகரிக்கப்படும் என்பதோடு, கேள்வி வைப்புப் பணத்தையும் இழக்க நேரிடும்.

க. நவநீதன்
உப தலைவர்
வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி/14295)



# மரண அறிவித்தல்

## வயிரவநாதன் வேலுப்பிள்ளை J.P.

(ஓய்வுபெற்ற பதில் உதவி மாவட்ட பதிவாளர்)

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வயிரவநாதன் வேலுப்பிள்ளை 11.12.2000 அன்று காலமானார்.

அன்னார் வயிரவநாதன் - சோதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், கோப்பாய் தெற்கு இராமலிங்கம்–சின்னப்பிள்ளை தம்பதிகளின் அருமைமருமகனும், நவமணியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அருமைக் கணவரும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் ஈஸ்வரி, சின்னத்தம்பி, (ஓய்வுபெற்ற ஆசிரியர்), ஆறுமுகம் (அதிபர், புத்தூர் ஸ்ரீ சோமஸ் கந்தாக் கல்லூரி), கணபதிப்பிள்ளை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சரஸ்வதி ஆகியோரின் அன்புச் சகோதரரும், தம்பித்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்), பாக்கியம், காலஞ்சென்ற தருமலிங்கம் மற்றும் வேதநாயகி, கந்தசாமி, தங்கரத்தினம் (ராசு), ருக்குமணிதேவி, நிர்மலாதேவி, கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலேந்திரா (கனடா), நாகேந்திரா (தொழில் நுட்பக் கல்லூரி), இராஜேந்திரா(பொதுச் சுகாதார பரிசோதகர், அச்சுவேலி), குபேந்திரா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மகாலட்சுமி(கனடா), சிவாஜினி ஆகியோரின் ஆசை மாமனாரும் தேவகி (கனடா), கிசோர் ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14-12-2000) வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
ஆவரங்கால். (81625)

யாழ்ப்பாணம்

# அமெரிக்க அதிபர் பதவித் தேர்தல்; மறு எண்ணிக்கைக்கு உச்ச நீதிமன்றம் மறுப்பு!

## புஷ்ஷுக்குச் சாதகமான இறுதித் தீர்ப்பு!!

வாஷிங்ரன், டிசெ. 14

அமெரிக்க அதிபர் பதவிக்கான தேர்தலில் புளோரிடாவில் அளிக்கப்பட்ட வாக்குகளை ஆள்கள் மூலம் எண்ணும்படி மாகாண நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமெரிக்க உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

இதனால் குடிரசுக் கட்சியின் ஜோர்ஜ் டபிள்யு. புஷ் அடுத்த அதிபராக வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் அல்கோர், புளோரிடாவில் ஆள்கள் மூலம் மீண்டும் வாக்குகளை எண்ண உத்தரவிடும்படி மாகாண நீதிமன்றத்திடம் கோரியிருந்தார்.

இந்தக் கோரிக்கையை மாகாண நீதிமன்றம் ஏற்று மறு எண்ணிக்கைக்கு உத்தரவிட்டது.

இதனை எதிர்த்து அமெரிக்காவின் அதி உயர் சட்ட அமைப்பான அமெரிக்க உச்ச நீதிமன்றத்தில் புஷ் மேன்முறையீடு செய்தார்.

மேன்முறையீட்டை விசாரித்த 9 நீதிபதிகள் அடங்கிய குழு இதுவரை இழுபறியை ஏற்படுத்தியிருந்த மறு வாக்கு எண்ணிக்கைக்கு தடை விதித்து இறுதித் தீர்ப்பு வழங்கியுள்ளது

பில்கிளின்ரனை அடுத்துப் பதவியேற்கும் புதிய அதிபரைத் தேர்ந்தெடுக்கத் தேர்தல் மன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை கூடவுள்ளது.

இந்த நிலையில் மீண்டும் வாக்குகளை எண்ணுவதற்கு அவகாசம் இல்லை என்று தனது தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள நீதிமன்றம்,

தற்போதைய சூழ்நிலையில் வாக்குகளை மறுபடி எண்ணுவது அரசமைப்புச் சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் கூறியுள்ளது.

மேற்படி தீர்ப்பு அமெரிக்க அதிபர் தேர்தல் தொடர்பாக நிலவிய கடந்த ஒரு மாத கால இழுபறியை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளதாக நம்பப்படுகிறது. (ஒ)

# வெடிகுண்டு வெடித்ததாலேயே பாபர் மசூதி தரைமட்டமானதாம்

## ஆர். எஸ். எஸ். தலைவர் கூறுகிறார்

புதுடில்லி, டிசெ. 14

குண்டு வெடித்ததாலேயே பாபர் மசூதி இடிந்து தரை மட்டமாகியதாக இந்துத்துவ அமைப்பான ஆர். எஸ். எஸ்ஸின் தலைவர் சுதர்சன் கூறியுள்ளார்.

இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலத்தின் அயோத்தியில் இராமர்பிறந்ததாகக் கருதப்படும் இடத்தில் முகலாய மன்னர் பாபரால் கட்டப்பட்ட மசூதி ஒன்று அமைந்திருந்தது.

அந்த மசூதியை இடித்து விட்டு அதே இடத்தில் இராமருக்குக் கோயில் கட்டுவதை நோக்கமாகக் கொண்ட பாரதீய ஜனதாக் கட்சி உட்படப் பல இந்துத்துவ அமைப்புகள் 1992 ஆம் ஆண்டு டிசெம்பர் 6 ஆம் திகதி இடித்துத் தரைமட்டமாக்கின.

மசூதி இடிக்கப்பட்டது தொடர்பாக 3 மத்திய அமைச்சர்கள் உட்பட 43 பேர் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 3 மத்திய அமைச்சர்களையும் பதவி விலகக் கோரி எதிர்க் கட்சிகள் ஆர்ப்பட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தச் சமயத்தில், குற்றஞ் சாட்டப்பட்டவர்களைத் தப்பிக்க வைக்க வே. சுதர்சன் வெடிகுண்டு வெடித்ததினால் பாபர் மசூதி இடிந்ததாகப் புதுக்கதை ஒன்றை உருவாக்கி விட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர் (ஒ)

# அரசியல் நடவடிக்கையில் ஈடுபட ஷெரீப்புக்குச் சவூதியில் தடை



ரியாத், டிசெ. 14

நாடு கடத்தப்பட்டுள்ள பாகிஸ்தானிய முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், சவூதி அரேபியாவில் தங்கியிருக்கும் போது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து சவூதி அரேபிய உள்துறை அமைச்சக அதிகாரி ஒருவர் கூறுகையில், நவாஸ் ஷெரீப், தற்போது அரச விருந்தினராகத் தமது நாட்டில் தங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆனால் அங்கு ஷெரீப் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்ற நிபந்தனையின் பேரிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அந்த அதிகாரி—

சவூதி அரேபிய அரசு நவாஸ் ஷெரீப் குடும்பத்தினருடன் தங்குவதற்கு ஒரு மாளிகையை வழங்கியுள்ளதாகவும்—

சிறந்த மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சை பெற வசதி செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

குற்றவியல் மற்றும் ஊழல் வழக்குகளில் தண்டனை பெற்று சிறையிலிருந்த நவாஸ் ஷெரீப் பாகிஸ்தானின் இராணுவ அரசால் பொது மன்னிப்பு வழங்கப்பட்டு சவூதி அரேபியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளது தெரிந்ததே. (ஒ-5-7)

# அசாமில் தொழில் நிமித்தம் வாழும் வெளி மாநிலத்தவர்களுடன் தீவிரவாதிகள் கடும் மோதல்!

## ஒரே நாளில் 10 பேர் மரணம்!

கௌகாத்தி, டிசெ. 14

இந்தியாவின் அசாம் மாநிலத்தில் பிரிவினை கோரும் தீவிரவாதிகளுக்கும்' பிற மாநிலத்தவர்களுக்கும் இடையே இடம்பெறும் மோதல்களில் நேற்று முன்தினம் 10 பேர் உயிரிழந்துள்ளனர்

பீகார் உள்ளிட்ட வட இந்திய மாநிலங்களில் இருந்து அசாமில் தொழில்களின் நிமித்தம் வசிப்பவர்கள் மீது பிரிவினை கோரிவரும் அசாம் தீவிரவாதிகள் கடந்த சில நாள்களாகத் தாக்குதல் நடத்தி வந்தனர்.

இந்தத் தாக்குதல்களில் வெளி மாநிலத்தவர் சிலர் கொல்லப்பட்டதையடுத்து வெளி மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் தீவிரவாதிகளின் குடும்பத்தினரைத் தாக்கத் தொடங்கினர்.

தொடரும் இந்த மோதல்களில் நேற்று முன்தினம் மட்டும் 10 பேர் உயிரிழந்தனர்.

தீவிரவாத இயக்கத்திலிருந்து வெளியேறியவர் அவரது குடும்பத்தினர் தீவிரவாதி ஒருவரின் சகோதரர்கள் ஆகியோர் மற்றும் பீகார் உட்பட வெளி மாநிலத்தவர்கள் ஆகியோர் உயிரிழந்தவர்களில் அடங்குவர்.

பிற மாநிலத்தவர்கள் அசாம் மாநிலத்தைச் சுரண்டி வருவதாக 'உல்பா' உட்பட தீவிர வாத அமைப்புகள் குற்றஞ் சாட்டி வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-6)

## கபில்தேவிடம் ஊழல் விசாரணை

புதுடில்லி, டிசெ. 14

இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, முன்னாள் இந்திய அணி வீரர்களான, கபில்தேவ், நிகில்சோப்ரா, அஜித் வடேகர் ஆகியோரிடம், கிரிக்கெட் பந்தய பேர ஊழல் தொடர்பாக விசாரணை நடத்தும்படி, சபையின் ஊழல் தடுப்பு ஆணையாளர் கே. மாதவனிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## தபால் ஊழியர் 8 ஆவது நாளாக வேலை நிறுத்தம்

புதுடில்லி, டிசெ. 14

இந்தியாவில் ஒரு வார காலமாகத் தொடர்ந்து வரும் அஞ்சல் ஊழியர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தால் தபால் துறைச் சேவைகள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன.

இதேசமயம் பொதுநல மனு ஒன்றை விசாரித்த டில்லி உயர் நீதிமன்றம் சீர்குலைந்துள்ள தபால் துறைச்சேவைகளை இரு நாள்களுக்குள் வழமைக்குக் கொண்டு வரும்படி மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது. (ஒ-5-6)

# 'சார்க்' மாநாட்டை கூட்டும்படி உறுப்பு நாடுகள் வலியுறுத்தல்

'சார்க்' எனப்படும் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பை புனரமைக்க வேண்டிய அவசியத்தை அதன் உறுப்பு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

1985இல் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு கடந்த 18 மாதகாலமாக உயர் மட்டக் கூட்டங்கள் எதனையும் நடத்தவில்லை.

பாகிஸ்தானின் இராணுவ ஆட்சியாளர் பர்வேஷ் முஷாரப் கலந்துகொள்ளும் 'சார்க்' மாநாட்டில் பங்கேற்க இந்தியா விரும்பததால் உயர் மட்டக் கூட்டங்களைப் புறக்கணித்து வருகிறது.

ஓர் உறுப்பு நாடு பங்கேற்காவிட்டால் கூட கூட்டத்தைக் கூட்ட முடியாது என்ற 'சார்க்' விதி முறைப்படி, இந்தியா பங்கேற்காததால் நேபாளத்தில் இந்த ஆண்டு நடத்தப்பட இருந்த உச்சி மாநாடு பிற்போடப்பட்டுள்ளது.

'சார்க்' உயர்மட்டக் கூட்டங்கள் நடைபெறாதது பூட்டான், நேபாள் போன்ற அதன் பின்தங்கிய உறுப்பு நாடுகள் பெறும் உதவிகளுக்கு தடையேற்படுத்தியுள்ளதால், விதிகளை மாற்றி உயர் மட்டக் கூட்டங்கள் நடைபெற வழி ஏற்படுத்தும்படி அந்த நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

தற்போது தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இலங்கை வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-5-7)

# அரசியல்வாதிகளின் தூண்டுதலால் வீரப்பனைச் சிறையிலிருந்து பொலீஸாரே தப்ப வைத்தனர்!

## உடனிருந்தவர் தெரிவிப்பு



சேலம், டிசெ. 14

சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் 14 ஆண்டுகளுக்கு முன்னர் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்த போது அரசியல் வாதிகளின் தூண்டுதலால், அவனை பொலீஸாரே தப்பிக்க வைத்தனர்.

இவ்வாறு வீரப்பனுடன் சிறையிலிருந்த துப்பாக்கி முனீர் என்பவர் கூறியுள்ளார்.

இது தொடர்பாக செய்தியாளரிடம் கூறுகையில்,

கொலை வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்டதற்காக, உப்பர் பேட் நகர பொலீஸார் 1986 ஆம் ஆண்டு என்னைக் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

சிறை அறையில் வீரப்பன் ஏற்கனவே அடைக்கப்பட்டிருந்தான். சிறையில் வீரப்பன் என்னுடன் பேசும் போது, ''பெங்களூரில் உள்ள முக்கியபுள்ளிகளுக்கு சந்தனக் கட்டை கடத்திக் கொடுத்தேன் — யானையைக் கொன்று அவற்றின் தந்தங்களையும் கொடுத்துள்ளேன்—''

''இவற்றுக்காகப் பணம்பெறவந்த இடத்தில், பணம் தரவேண்டியவர் பொலீஸில் என்னைச் சிக்க வைத்ததால் சிறையில் இருக்கிறேன்'' என்று தெரிவித்தான்.

ஒரு நாள் சிறையில் இருந்து வீரப்பனை பொலீஸார் கூட்டிச் சென்றனர் அதன் பிறகு வீரப்பன் திரும்பி வரவில்லை.

ஆனால், வீரப்பன் சென்ற சில மணித்தியாலங்கள் கழித்து, சிறை வளாகத்தில் பரபரப்பான தேடுதல் நடத்திய பொலீஸார், கழிப்பறைக்குச் சென்ற வீரப்பன் தப்பிவிட்டதாகக் கூறினார்கள்.

உப்பர்பேட் பகுதிப் பொலீஸ் நிலையத்துக்கு வந்த 2 அரசியல் வாதிகளின் ஏற்பாட்டிலேயே வீரப்பன் தப்ப வைக்கப்பட்டதாக பின்னர் பொலீஸ்காரர் ஒருவர் என்னிடம் தெரிவித்தார்.

இவ்வாறு துப்பாக்கி முனீர் கூறியுள்ளார்.

1997 ஆம் ஆண்டு வன விலங்கு ஆராய்ச்சியாளர்கள் இருவர் உட்பட 4 பேரை வீரப்பன் கடத்தியபோது, அவர்கள் மீட்கப்பட்டதில் துப்பாக்கி முனீர் முக்கிய பங்காற்றியது குறிப்பிடத்தக்கது. (ஒ-க)

# யசீர் அரபாத்துக்கு நெருக்கமான பலஸ்தீன தளபதியை வீடுபுகுந்து இஸ்ரேலியர் சுட்டுக் கொன்றனர்

மேற்குக் கரையில் பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்துக்கு நெருக்கமான ஒருவரை இஸ்ரேலிய இராணுவத்தினர் வீட்டுக்குள் புகுந்து சுட்டுக் கொன்றனர்.

அரபாத்தின் நேரடித் தலைமையில் செயற்பட்டு வரும் 'பாராஹ்' அமைப்பின் உயர் மட்டக் குழு உறுப்பினரும், பலஸ்தீனத் தளபதிகளில் ஒருவருமான அலி அல்ஹாத் என்பவரே சுட்டுக்கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் அதிகாலை நேரத்தில் மேற்குக் கரையில் உள்ள அல்ஹாத்தின் வீட்டுக்குள் கதவை உடைத்து நுழைந்த இஸ்ரேலியப் படையினர் அவரைச் சுட்டுக் கொன்றனர்.

மேற்குக் கரை மற்றும் காஸாவில் இஸ்ரேலியப் படைகளுக்கும் பலஸ்தீனர்களுக்கும் இடையே கடந்த 11 வாரகாலமாக இடம்பெற்று வரும் மோதல் சம்பவங்களில் கொல்லப்பட்ட 4 வது 'பாராஹ்' அமைப்புத் தலைவர் அல்ஹாத் ஆவார்.

இந்த மோதல்களில் இது வரை 313 பேர் உயிரிழந்துள்ளனர். இறந்தவர்களில் 38 பேர் இஸ்ரேலியர்கள் மற்றவர்கள் பலஸ்தீனர்கள். (ஒ-5-7)

## தவறவிடப்பட்டது

03-12-2000 அன்று மல்லாகம் சந்திக்கும் மருதனார்மடத்துக்கும் இடையில் பெறுமதிமிக்க தங்கச் சங்கிலியுடன் கூடிய **பெண்கள் கைக்கடிகாரம்** ஒன்று தவறிவிட்டது.
அதைக் கண்டெடுத்தவர்கள்
**உதயன் பணிமனையில் சமர்ப்பித்தால்**
தகுந்த சன்மானம் வழங்கிக் கௌரவிக்கப்படுவீர்கள்.

(சி/14286)

## இலங்கை மின்சார சபை யாழ். பிரதேசம்
## மின்தடை பற்றிய அறிவித்தல்

காங்கேசன்துறையிலுள்ள மின் நிலையத்தில் அவசர திருத்த வேலைகள் செய்ய வேண்டியிருப்பதால் 2000-12-15 ஆம் திகதியன்று காலை 09.30 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை யாழ். குடாநாட்டின் எல்லாப் பகுதிகளுக்குமான மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்பதைப் பாவனையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

இதன் காரணமாக மின்பாவனையாளர்களுக்கு ஏற்படும் சிரமங்களுக்காக மனம்வருந்துகின்றேன்.

**பிரதேச மின் பொறியியலாளர்,**
இலங்கை மின்சார சபை,
யாழ். பிரதேச அலுவலகம்,
சுன்னாகம்.

''சூழல் மற்றும் அபிவிருத்தி வேலைகளுக்கு கைகொடுக்கும்''
— இலங்கை மின்சார சபை.

(சி/14284)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும்



அமரர்
## குணரத்தினம் செல்வத்துரை
(ஆயுள்வேத வைத்தியர், இளைப்பாறிய அதிபர்)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 03-01-1927 | 15-11-2000 |

அன்போடும், பாசத்தோடும் எம்மை வளர்த்துக் காத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். யாழ். மருத்துவ மனையில் இருந்தபோது உதவிய யாழ். உயர் தொழில் நுட்ப நிறுவக இயக்குநர் இராஜரட்ணம், விரிவுரையாளர்கள், ஊழியர்கள், சைவ வித்தியா விருத்திச் சங்க உறுப்பினர்களுக்கும், அனுதாப உரைகள் ஆற்றியவர்களுக்கும், மலர்வளையம் சாத்தியோருக்கும், அஞ்சலிகளை வெளியிட்டவர்களுக்கும், பத்திரிகைகள் மூலம் கண்ணீர் அஞ்சலிகள் தெரிவித்தவர்கள் மற்றும் நேரடியாக வந்து கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது உளங்கனிந்த நன்றிகள்.

நாளை (15-12-2000) வெள்ளிக்கிழமை 11 மணிக்கு இடம்பெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம். [81581]

## தாச்சிப் போட்டி

வலி. வடக்கு, டிசெ. 14
வடமாகாணத் தாச்சிச் சங்கத்தின் அனுசரணையுடன் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் அமரர் நல்லதம்பி ஞாபகார்த்த தாச்சி சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகள் வருமாறு:-
உரும்பிராய் வைத்தீஸ்வரா வி. கழகம் எதிர் பண்டத்தரிப்பு சாந்தை வி. கழகம். (ம-86)

## ஒளி விழா

வலி வடக்கு டிசெ. 14
தெல்லிப்பழை தென் இந்திய திருச்சபையினர் தெல்லிப்பழை மாவட்ட வைத்திய சாலையில் உள்ள உள நல சிகிச்சை விடுதியில் சிகிச்சை பெறுபவர்களுடன் சேர்ந்து நாளை பிற்பகல் 3.00 மணிக்கு ஒளி விழா கொண்டாடவுள்ளனர். (ம-86)

## சாரதா தேவி ஜயந்தி தினம்

வடமராட்சி, டிசெ 14
அன்னை ஸ்ரீ சாரதா தேவி ஜயந்தி தினம் எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 5.30 மணி முதல் பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் நடைபெறும்.
(ம-173-30)

## சங்கக் கிளை

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மற்றுமொரு சங்கக் கிளை பொதுமக்களின் வசதி கருதி கடந்த செவ்வாய்க்கிழமை மீண்டும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.
கொட்டடியில் உள்ள எட்டாம் இலக்க ''குமரன்'' என்ற பெயருடைய கிளையே திறந்து வைக்கப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் சி. வி. கே. சிவஞானம் தெரிவித்தார். (இ-17)

## வாராந்த நிகழ்வுகள்

கொழும்புத்துறை, டிசெ. 14
தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ, கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் வாராந்த நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் பேரவையின் தலைவர் தொழிலதிபர் சி. நாகலிங்கம் தலைமையில் நடைபெறும்.
இந்நிகழ்வுக்கான அறிமுகவுரையை சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் க. சிவாஜி நிகழ்த்துவார்.
செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன் ஆசிரியர் 'இறவாத இன்ப அன்பு' என்ற தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.
நண்பகல் 12.30 மணிக்கு அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்- (ஐ-30)

## சுழற்சி முறை கடன் உதவி

சண்டிலிப்பாய், டிசெ. 14
பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டப் பிரிவு வழங்கிய நிதியைக் கொண்டு மேலும் பல சங்க உறுப்பினர்களுக்கு சுழற்சி முறையிலான கடன் வழங்கப்பட்டு வருகின்றது.
விவசாயம், கால் நடை வளர்ப்பு, சிறுகைத் தொழில் ஆகிய தொழில் முயற்சிகளுக்கு 10 ஆயிரம் ரூபா, 20 ஆயிரம் ரூபா, 40 ஆயிரம் ரூபா ஆகிய தொகைகளில் கடனுதவிகள் வழங்கப்பட்டு வருவதாகச் சங்கப் பொது முகாமையாளர் எஸ். வைரவநாதன் தெரிவித்தார்.
20 மாத காலத்தில் இக் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டும் என்ற நிபந்தனையுடன் கடன் வழங்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)

## அறிவித்தல்

வலி. கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி
(வரையறுக்கப்பட்டது)
கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான
## கிளைப் பொதுச்சபைக் கூட்டம்

காலம் 2000 - 12 - 24

வடக்கு — கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கிவரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவு செய்யப்பட்ட துணைவிதிகளின் 23 ஆம் பிரிவின் கீழ் வடக்கு—கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு உரித்தாக்கப்பட்டும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1998 — 05 — 19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்காக ஆக்கப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 2000 - 12 - 24 ஆம் திகதி முற்பகல் 10-00 மணிக்கு ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட இடங்களில் நடைபெறும்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்குச் சமுகமளித்து வாக்களிக்கத் தகைமையுடைய உறுப்பினர்களுக்கு என்னால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரால் ஏற்கனவே கூட்ட அறிவித்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. குறித்த அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத அங்கத்தவர்கள் அதனை சம்பந்தப்பட்ட கிளையின் முகாமையாளரிடம் பெற்றுக் கொள்ளவும். கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடைமுறை ஒழுங்குகள் பற்றிய பொது அறிவித்தல்களை சங்கத்தின் சகல கிளைகளிலும் பொது இடங்களிலும் பார்வையிடலாம்.

கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களைக் குறித்த அறிவிப்புக்களின்படி கிளைப் பொதுச் சபைக் கூட்டங்களுக்குச் சமுகமளித்துத் தங்கள் ஜனநாயக உரிமைகளைப் பயன்படுத்தி கூட்டுறவு இயக்கத்தினை ஜனநாயக ஆளுகை கொண்டதாகச் செயற்படுத்துமாறும் கேட்டுக் கொள்கின்றேன்.

செ. ஆ. சண்முகநாதன்
கூ. அ. உ. ஆணையாளர்,
கூட்டுறவு அலுவலகம், யாழ். மாவட்டம்.
857, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். (சி/14287)

## 5 ஆம் வருட சிராத்ததினம்



## அமரர் M. S. கந்தையா
(பிரபல வர்த்தகர், கந்தா ஸ்ரோர்ஸ் — வரணி)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 10-03-1936 | 15-12-1995 |

திதி: 14-12-2000

சொற்பாலமிழ்திவர் யாம் சுவை என்ன தரணியிவசநற்பாலதாக நலமுடன் வாழ வழி வகுத்தீர்
சொற்பாவைதாய சதுர்த்திசேர் கார்த்திகை நாளதனில்
பொற்பாதம் வேண்டி புவியினை நீத்தனை
புலம்புவமே!

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

குருக்கள் குடியிருப்பு,
வரணி. (81653)

## விற்பனைக்கு

புதியதும் நல்ல நிலையில் உள்ளதுமான **MASSEY FERQUSON 240** ட்ரக்டர் (நான்கு சில்லு உழவு இயந்திரம் - ஸட்டி, கலப்பைகளுடன்) விற்பனைக்கு உண்டு. (டிஸ், டில்லர்)

*தொடர்பு:*
**தலைவர்,**
**T.R.R.O.**
**மானிப்பாய் வீதி,உரும்பிராய்.**

(C/14296)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 04 - 02 - 1925



ஆண்டவன் அடியில் 14 - 11 - 2000

## அமரர் சி.க.மயில்வாகனம்

சாவகச்சேரித் தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினரும், சாவகச்சேரி முன்னாள் நகர சபைத் தலைவரும், சாவகச்சேரி முன்னாள் பல நோ.கூ.சங்கத் தலைவருமாகிய எங்கள் குடும்பத் தலைவர் 14.11.2000 அன்று கொழும்பில் காலமாகியதையிட்டு அவரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும், பத்திரிகையில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசியில் அஞ்சலி செலுத்தியோருக்கும் நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

என்றும் நினைவருந்தும்
**மயில்வாகனம் கஜேந்திரலிங்கம்**
(மகன்)

*நிரந்தர முகவரி:*
கென்ஸ்மன் லேன்,
சாவகச்சேரி.

*தற்போதைய முகவரி:*
இலகடி வீதி,
கரவெட்டி மத்தி,
கரவெட்டி.

(C/14296)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 04.02.1925



இறப்பு 14.11.2000

சாவகச்சேரித் தொகுதி தமிழர் விடுதலைக்கூட்டணியின் மூத்த உறுப்பினரும், சாவகச்சேரி நகரசபை முன்னாள் தலைவருமாகிய

## அமரர் க.மயில்வாகனம்

அவர்களின் 31ஆம் நாள் நினைவு தினமாகிய இன்று அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

ந.இரவிராஜ்,
*அமைப்பாளர்,*
*தமிழர் விடுதலைக்கூட்டணி,*
*சாவகச்சேரித் தொகுதி.*

(C/14297)

# ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15.04.1938



மறைவு 07.12.1999

## கனகமணி இராசரத்தினம்

**குடும்பத்தின் முழு நிலாவே**
**பண்பின் சுடரொளியே**
**அன்பிற்கு இலக்கணமே ~ அம்மா!**
**பிள்ளைகள் எம்மை பாரினிலே**
**தவிக்கவிட்டு ஓடோடிச் சென்றது**
**எங்கே? ~ அம்மா!**
**ஓராண்டு இல்லை ஓராயிரம் ஆண்டு**
**சென்றாலும் ஆறாது எம் துயர்.**

பிரிவால் துயருறும்,
கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

51/4, செட்டித் தெரு,
நல்லூர்.

(81670)

# பணியாளர் விவரங்களை அனுப்பப் பணிப்பு

குருநகர்,டிசெ.14

யாழ்.வலயக் கல்வி அலுவலங்கங்களில் சேவை புரியும் இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் பெயர் விவரப் பட்டியலை உடனடியாகத் தமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வியமைச்சு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்களிடம் கேட்டுள்ளது.

இணைந்த சேவையைச் சேர்ந்த எழுதுநர்கள், கணக்குப் பதியுனர், தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர்கள், களஞ்சியக் காப்பாளர், சிறாப்பர், தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஆகியோரின் விவரங்களை அவர்களது பெயர் வகிக்கும் பதவி, தரம், முதல் நியமனத் திகதி, வலயக் கல்வி அலுவலகத்தில் கடமையேற்ற திகதி போன்ற விவரங்களை உள்ளடக்கி பக்ஸ் மூலம் உடனடியாகத் தமக்கு அறிவிக்குமாறு வடக்கு -கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் க.பரமேஸ்வரன் சம்பந்தப்பட்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ஐ-51)

# கொடுப்பனவு வழங்க விவரங்கள் சேகரிப்பு

குருநகர்,டிசெ.14

யாழ்.வலயக் கல்விப் பாடசாலைகளில் சேவைபுரியும் அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா உத்தியோகத்தர்களுக்கு 01.07.99 முதல் 31.12.99 வரையான காலப் பகுதிக்குரிய ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக யாழ்.வலயக் கல்விப் பாடசாலை அதிபர்களுக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

கொடுப்பனவை வழங்குவதற்கான விவரங்களை படிவங்களில் பூர்த்தி செய்து உறுதிப்படுத்தி இம் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்துக்குக் கிடைகக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களை யாழ்.கல்வி வலயம் கோரியுள்ளது. (ஐ-51)

# ஐ.தே.கவின் மனு விசாரணைக்கு ஏற்பு

கொழும்பு,டிசெ.14

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை ஆட்சேபித்து ஐ.தே.கட்சி தாக்கல் செய்த மனுவை உயர் நீதி மன்றம் விசாரணைக்கு எடுக்கவுள்ளது.

இந்த மனு மீதான விசாரணை பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி நடைபெறுமென உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நேற்று அறிவித்துள்ளனர். (ஐ-7)

# மீனவர்கள் விடுதலை

புதுடில்லி,டிசெ.14

இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 56 இலங்கை மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் நாளை மறுதினம் சனிக்கிழமை இலங்கைக்கு வரவுள்ளனர். (ஐ-10)

# மேலும் இருவருக்கு டெங்குக் காய்ச்சல்?

யாழ்ப்பாணம்,டிசெ.14

டெங்கு காய்சல் அறிகுறிகளுடன் மேலும் இருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இளவாலை பண்டாரமடத்தடியைச் சேர்ந்த சவரிமுத்து மரியபிள்ளை (வயது-67),வண்ணார் பண்ணை, காரைக்காட்டு ஒழுங்கையைச் சேர்ந்த சண்முகலிங்கம் புஷ்பராணி(வயது-45) ஆகிய இருவருமே டெங்குக் காய்சலுக்கான அறிகுறிகளுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களுக்கு டெங்கு காய்சலுக்கான மேலதிக இரத்தப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இவர்களுடன் இதுவரை 5பேர் டெங்குக் காய்ச்சலுக்கான அறி குறிகளுடன் சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் ஒருவர் பரிசோதனை அறிக்கை பின்படி டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ஐ-15-139)

# குழாய் வடிவான மர்மப் பொருள் வெடித்து மாணவன் கை இழந்தான்

## நயினாதீவுக் கடற்கரையில் சம்பவம்

யாழ்ப்பாணம்,டிசெ.14

கடற்கரையில் கிடந்த குழாய் போன்ற வடிவிலான மர்மப் பொருள் ஒன்றை எடுத்து அதைக் கையாள முற்பட்ட பாடசாலை மாணவன் ஒருவன் அப்பொருள் திடீரென வெடித்ததில் வலது கையை மணிக்கட்டுடன் இழந்து படுகாயமடைந்தான்.

நயினாதீவு கடற்கரையில் நேற்றுக்காலை இச்சம்பவம் இடம்பெற்றது.

நயினாதீவு எட்டாம் வட்டாரம் ஸ்ரீ கணேசா மகாவித்தியாலய தரம் 8மாணவனான உசைன் றிபான் (வயது-12) என்பவரே படுகாயமடைந்தார். இவரது வலது கை மணிகட்டுக்குக் கீழே துண்டிக்கப்பட்டது. இடது கையில் சில விரல்கள் சிதறி உள்ளன.

இம் மாணவன் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருக்கிறான். (ஐ-5-15-139)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பூமணி சபாபதி

சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் குருமன்காடு வவுனியாவை வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பூமணி சபாபதி அவர்கள் செவ்வாய்க் கிழமை இரவு சிவபதமடைந்தார்.

அன்னார் சீனி சபாபதி((முன்னாள் கிராமசபை உறுப்பினர், உடுவில்) அவர்களின் இனிய துணைவியும், காலஞ்சென்ற பூதப்பிள்ளை - பாக்கியம் தம்பதிகளின் அருமைப்புத்திரியும், காலஞ்சென்ற சீனி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அருமை மருமகளும், சபா.புஸ்பநாதன்(துர்க்கா ஸ்ரேசனேர்ஸ், சுன்னாகம்), புஸ்பதேவி (இரத்மலானை), இரஞ்சிதாதேவி (வவு னியா), சபா.ஜகத்நாதன் (சாயி ஸ்ரேசனேர்ஸ் அன் புக்சொப், கொட்டாஞ்சேனை),Dr.றேணுகாதேவி (துர்க்கா மெடிக்கல் கிளினிக், கந்தரோடை - இடம்பெயர்வு, வவுனியா), சபா.செல்வநாதன் (டென் மார்க்), சபாநாதன் (ஜேர்மனி), சபா.சத்தியநாதன்(வாணி புத்தகசாலை, வவுனியா), சபா.சற்குணநாதன்(சுவிஸ்), ஆகியோரின் பாசமிகு அன்னையும்,

சறோஜினிதேவி(நீதினி முகவர் தபாலகம்,சுன்னாகம்), யோகராசா (விமான நிலையம்,இரத்மலானை), செல்வராசா (மெட்றோ பொலிற்றன் ஹோட்டல், டுபாய்), சுபாசினி (கொட்டாஞ்சேனை), முத்துராசா(தேசிய வீடமைப்பு அதிகார சபை, வவுனியா), கோமதி (டென்மார்க்), ஸ்ரீ நந்தினிதேவி (தெஹிவளை), செல்வராசமலர் (வவுனியா) ஆகியோரின் அன்பான மாமி யாரும்,

ஜனனி, ஷாலினி(சுன்னாகம்), சைலஜன், நிறோஜன் (இரத்மலானை), தனூஜன், தர்ஷன், நாகதீபன் (வவுனியா), றவீன் (கொட்டாஞ்சேனை), செந்தூரன், பிரணவன், கோகுலன்(வவுனியா), ஷாருஹன், மேனஹன் (டென்மார்க்) ஆகியோரின் அன்புமிகு பேர்த்தியாரும்,

திருமதி தவமணி கந்தையா(சுன்னாகம்), காலஞ்சென்றவர்களான நீதிபதி பூதப்பிள்ளை, சதாசிவர்த்தினம், செல்வரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வவுனியா குருமன்காடு கோயில் வீதி 30/2, இலக்க இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இன்று வியாழக்கிழமை மு.ப 10.30க்கு வவனியா வேப்பங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை அறியத்தருகின்றோம்.

தயவுசெய்து இத்தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*30/2, கோவில் வீதி,*
*குருமன்காடு - வவுனியா.*

(14289)

சீனி சபாபதி
(துணைவர்)

## சோமசுந்தரம் கெங்காதரன்

(முன்னாள் நிர்வாக உத்தியோகத்தர் துறைமுகக் கூட்டுத் தாபனம், கொழும்பு, முன்னாள் தலைவர் - சாந்தையப்பதி காளிகா புவனேஸ்வரி அம்பாள் தேவஸ்தானம், கரம்பொன்)

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த சோமசுந்தரம் கெங்காதரன் (பாலசிங்கம்) அவர்கள் 12.12.2000 செவ்வாய்க்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் அமரர்களான சோமசுந்தரம் - கனகம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும் அமரர்களான நடராஜா - இராசம்மா தம்பதிகளின் மருமகனும் அமரர் நகுலாம்பாளின் பாசமிகு கணவரும் சிறீதரன் (ஜேர்மனி) சுபோதினி (பிரான்ஸ்), சிவந்தினி, குமுதினி (பிரான்ஸ்), ஜெயந்தினி (ஜேர்மனி), அமரர் வினோதினி, ரதினி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பத்மாதேவி, பழனிவேல்(பிரான்ஸ்), குமரகுருநாதன் (ஜேர் மனி), மகாலிங்கம் (பிரான்ஸ்) ரகுநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கௌரிநாயகி, மகாலிங்கம், கமலாம்பிகை ஆகியோரின் சகோதரனும் நாகராசா, விஜயலக்சுமி, சந்திரசேகரம்(லண்டன்), இராஜகுமார்(அமெரிக்கா) Dr. சிவபாலன் (பஸ்பத்த) ஆகியோரின் மைத்துனரும் திலகவதி, மன்மதராசா, பழனிவேல், சுகந்தன், கஜந்தன், சங்கீதா ஆகியோரின் தாய்மாமனும், சௌமியாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.12.2000) வியாழக்கிழமை பி.ப. 4 மணிக்கு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொழும்பு விலாசம்:
*149/2 நியூகாம் சதுக்கம்,*
*கொழும்பு-13*
*T.P.451034*

(81674)

தகவல்:
சோ.மகாலிங்கம்
(சகோதரன்)
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

## நவரட்ணசிங்கம் சாம் வடிவேலு

நவரட்ணசிங்கம் சாம் வடிவேலு அவர்கள் 09.12.2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரோஜினி வடிவேலு அவர்களின் அன்புக் கணவரும், டிலீத்திரா, டினேஸ் அவர்களின் பிரியமுள்ள தகப்பனாரும் அஜித்குமாரின் மாமனாரும், காலஞ்சென்ற கிரேஸ் வடிவேலு, ஜெயரட்ணசிங்கம் மற்றும் அரியமலர் செல்வராஜசிங்கம்(ஜெயா) அவர்களின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (14.12.2000) வியாழக் கிழமை பி.ப. 3 மணிக்கு A.F.Raymond Parlourஇல் நடைபெற்று மாலை 4.30 மணிக்கு கனத்தையில் தகனம் செய்யப்படும்.

5,ரட்ணகாரா இடம்,
தெஹிவளை.

(81675)

தகவல்:
அஜித்குமார்
(மருமகன்)

## படையினரின் வாகனங்கள் சம்பந்தப்பட்ட
# விபத்துகளில் உயிரிழப்போருக்கு நஷ்டஈடு வழங்கக் கோரிக்கை

குடாநாட்டில் படையினரின் வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் உயிரிழக்கும் சிவிலியன்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பி கோரியுள்ளது.

இது தொடர்பாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்லவுடன் ஈ.பி.டி.பி. தூதுக்குழு ஒன்று கலந்துரையாடியுள்ளது.

இராணுவத் தலைமையகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா, கே.வி. குகேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் போது ஈ.பி.டி.பி. தூதுக்குழு முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு :-

★ குடாநாட்டில் இராணுவத்தினரின் வாகனங்கள் சம்பந்தப்பட்ட விபத்துக்களில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எந்தவித நஷ்டஈடும் வழங்கப்படுவதில்லை. எனவே இத்தகையோருக்குப் படையினர் நஷ்டஈடு வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ சாவகச்சேரியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது வீடுகளிலிருந்து பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கவேண்டும். அத்துடன் அவர்களின் பொருள்களை வேறு எவரும் சூறையாட அனுமதிக்கக் கூடாது.

★ குடாக்கடலில் மீன்பிடித் தொழில் மேற்கொள்ள விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் (ஐ-3)

### கதிர்காமரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கத்தின் நிலைப்பாட்டை விளக்கி அமைச்சர் கதிர்காமர் அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறப்பட்டுள்ள கருத்துக்கள் சரியானவையா?" என்று அமைச்சர்கள் சிலர் கேள்வி எழுப்பினர்.

இதற்குப் பதிலளித்த பிரதமர், "அந்தக் கருத்து அவரது சொந்தக் கருத்தாக இருக்கலாம். அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கி அறிக்கை விடப்பட்டது பற்றி எனக்குத் தெரியாது" எனப் பதிலளித்துள்ளார்.

இதேவேளை -

தேசியப்பிரச்சினைகள் தொடர்பாக அரசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கும் அறிக்கைகள் அமைச்சரவையின் அங்கீகாரத்துடனேயே வெளியிடப்படவேண்டும் என்று நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கலந்து கொள்ளவில்லை எனத் தெரியவந்தது. (ஐ-3)

### சடலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட இந்தச் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இன்று காலை அந்தச் சடலத்தைப் படையினரிடமிருந்து பொறுப்பேற்கும் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் பிரதிநிதிகள் குடாக்கடல் ஊடாகப் படகு மூலம் எடுத்துச் சென்று கல்முனைக் கடலில் வைத்து விடுதலைப் புலிகளிடம் ஒப்படைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-5-6)

### சமாதான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த அழைப்புக்குப் பதிலளிக்கும் வகையில் - அராசாங்கத்தின் நிலைப்பாட்டை விளக்கி - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஒப்பமிட்ட அறிக்கை ஒன்றை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் விடுத்திருந்தார்.

விடுதலைப் புலிகள் அமைப்புடன் எந்தவித நிபந்தனையும் இன்றிப் பேச்சு நடத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது என்று அங்கு கதிர்காமர் தெரிவித்தார்.

இந் நிலையில் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ள முயற்சிகளின் முன்னேற்றம், நோர்வேயின் பங்கு, தற்போதைய நிலைவரம் ஆகியன தொடர்பாக விளக்குவதற்காகவே கதிர்காமர் இந்தியா செல்வதாக வெளிவிவகார அமைச்சு அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார். (ஐ-3-10)

### வலி.மேற்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இரவு 10.30 மணிவரை தளர்த்தப்பட்டிருக்கும் என்று 513 ஆவது பிரிகேட் கட்டளை அதிகாரியான கேணல் லால் பெரேரா அறிவித்துள்ளதாக வலி.மேற்கு பிரதேச சபைத் தலைவர் என்.திரிலோகநாதன் தெரிவித்துள்ளார். (ஐ-3)

### பாலியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேடுதலின் போதே சிறுமி சடலமாக மீட்கப்பட்டார்.

இதேவேளை -

சிறுமி கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு இளைஞர்களைத் தமிழகப் பொலீஸார் நேற்றுக் கைது செய்தனர். (ஐ-7)

## நாணயக் குற்றித் தொலைபேசியில் குண்டு

மட்டக்களப்பு,டிசெ.14

நாணயக் குற்றித் தொலைபேசியில் நேரம் கணித்துப் பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் மூன்று முஸ்லிம் இளைஞர்கள் காயமடைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று மாலை 5.45 மணியளவில் காத்தான்குடிச் சந்தைப் பகுதியில் இடம்பெற்றது. (ஐ-7-21)

## வெலிகந்தவில் விவசாயிகள் மீது தாக்குதல்

கொழும்பு,டிசெ.14

வெலிகந்தவுக்கு வடக்கே ஐந்து கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ள மகேசன்புர என்ற கிராமத்தில் நெல்வயல்களில் வேலை செய்து கொண்டிருந்த விவசாயிகள் மீது நேற்று முன்தினம் பிற்பகல் 7.30 மணியளவில் இனந்தெரியாதவர்கள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் விவசாயி ஒருவர் உயிரிழந்தார் என்று விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஐ-3)

### மனித பாவனை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் க.கணேஸ்வரராஜா, உணவு, மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன், சுகாதாரப் பரிசோதகர்களான கு.பத்மகுமார், பி. சிவகுமார், எஸ்.எவ்.செபராஜா ஆகியோர் மேற்படி இடங்களுக்குச் சென்று பரிசோதனை செய்தபோது அரிசி மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எஸ்.குமாரவேலுடன் சுகாதார அதிகாரிகள் இது தொடர்பாகக் கலந்துரையாடியதைத் அடுத்து செயலகத்தால் விநியோகிக்கப்பட்ட 11 ஆயிரத்து 241கிலோ அரிசியையும் பொது மக்களுக்கு விநியோகிப்பதை நிறுத்தி வைப்பது எனவும் -

இது குறித்து யாழ்.அரச அதிபருடன் கலந்துரையாடியபின் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது எனவும் -

தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை கூ.சங்கக் களஞ்சியத்தில் உள்ள பழுதடைந்த அரிசி தொடர்பாக வலி.வடக்கு பிரதேச செயலர் திருமதி பத்மநாயகத்தின கவனத்துக்கு முறையிடப்பட்டுள்ளது.

அத்துடன் இது தொடர்பாக தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி, சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளருக்கும் அறிவித்துள்ளார். பழுதடைந்த அரிசி பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றதா என்பதை கண்காணிக்குமாறு சுகாதாரப் பரிசோதகர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.(ஐ)

# 'சிற்றி ஒவ் றிங்கோ' சேவை ஓரிரு வாரங்களில் தொடங்கும்

யாழ்ப்பாணம்,டிசெ.14

காலநிலை சீரில்லாததால் இடைநிறுத்தப்பட்ட 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை ஓரிரு வாரங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பல் சேவையை மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கும்படி யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் கப்பல் நிறுவனத்தின் உரிமையாளர்களைக் கேட்டிருந்தார்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரிகளுடன் இது விடயமாகக் கலந்துரையாடி வருவதாகவும் -

பெரும்பாலும் ஓரிரு வாரங்களில் இந்தச் சேவையை மீள ஆரம்பிக்கக் கூடியதாக இருக்கும் என்றும்-

கப்பல் நிறுவன உரிமையாளர்கள் தகவல் வெளியிட்டிருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார். (ஐ-3)

### பேச்சுக்களில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பான்மை இனம் என்ற வகையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதியான அமைச்சர் ஒருவரை புலிகளுடன் பேசும் அரச தரப்புக் குழுவில் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசிடம் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்கு மாகாணத்தின் எல்லைப்புற மக்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும் பேச்சின்போது கலந்துரையாட வேண்டி இருப்பதால் எல்லைக்கிராம மக்களின் சார்பில் அரச தரப்புப் பிரதிநிதிகள் குழுவில் தனக்கு இடம் அளிக்க வேண்டும் என்று மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன அரசிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.


இதற்கிடையில் -

யுத்தம் தொடர்பான விடயமே முதற்கட்டப் பேச்சுக்களில் முக்கியமாக ஆராயப்பட இருப்பதால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையை புலிகளுடன் பேசும் அரசதரப்புப் பிரதிநிதிகள் குழுவில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஒரு சாரார் வலியுறுத்தி வருவதாகவும் தெரியவருகிறது. (ஐ-3-20)


இன்றைய ஓடியோ CD வெளியீடு
விஜயின் பாடல் வரிகளுடன்
※ ப்பிரன்ஸ்
※ பூவே பெண் பூவே
ஓடியோ CD க்கள்
புதிய வீடியோ போஸ்ரர்கள்
விற்பனைக்குண்டு
(கையிருப்பு சொற்பம்)
மூர்த்தி வீடியோ
மானிப்பாய்
(C/14299)

கணக்கீடு
A/L 2001
வருமானச் செலவுக் கணக்கு
ஆரம்பம்:
15.12.2000 - 6.30 a.m.
ஆசிரியர்:
திரு.S.தவா
B.Com.(HONS) (Acc.Spl.)
NEW SCIENCE COLLEGE
JAFFNA (81643)

ஈசன் கல்வி நிலையம்
கே.கே.எஸ்.வீதி - கோண்டாவில்
கணக்கீடு
திரு.பாலவாசன்
B.B.A.(F.M.Spl)
A/L 2001
கம்பனி
SAT., SUN. => 3.15 p.m.
ஆரம்பம:
16.12.2K => 3.15 p.m.
(81398)

IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான
மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் - 2001
5000 மாணவர்களுக்கு

பல்கலைக்கழக, தொழில்நுட்பக்கல்லூரி, பாடசாலை மாணவர்களுக்கு ஏற்றவகையில் நன்கு திட்டமிடப்பட்ட பாடவிதானங்களைக் கொண்டது.
இப் புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாகும் ஓர் அரிய சந்தர்ப்பம்.
ஆசிரியர்கள், அலுவலகர்களின் தேவைக்கேற்ப வடிவமைக்கப்பட்ட பயிற்சிநெறிகளைக் கொண்டது.
விண்ணப்பப்படிவங்களை நீங்கள் IIS அலுவலகங்களிலும், உங்கள் பாடசாலைகளிலும், பிரபல தனியார் கல்வி நிறுவனங்களிலும், அருகில் உள்ள பிரபல புத்தக நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.
விண்ணப்ப முடிவுத்திகதி 24/12/2000 வரை நீடிக்கப்பட்டுள்ளது

வருடம் ஒரு முறை மட்டுமே கிடைக்கும் இவ் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள்
"IIS உங்கள் வளமான எதிர்காலத்தின் வழிகாட்டி"
மேலதிக விபரங்களுக்கு....
Institute of Informatics Studies (IIS)

'சின்ன விழி அசைத்து சிரித்து வரும் சித்திரத்தை
அள்ளி அணைத்து அரிய கல்வி ஊட்டி வைப்போம்'
பாலர் வகுப்பு Nursery Class
சிறப்புப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால்
ஜனவரி 03இல் ஆரம்பம்.
முதலில்-பதிவு செய்யும் 20 சிறார்களுக்கு மட்டுமே இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.
THE EXPRESS INSTITUTE KOPAY A BOON TO STUDENTS
பெயர் பதிவுகள் இன்று முதல் ஏற்றுக்கொள்ளப்படும்.
-அதிபர்-
The Express Institute
Irupalai, Kopay.

உ
ஸ்ரீ சிவகாமி அம்பாள் சமேத சிவசிதம்பரேஸ்வரர் தேவஸ்தானம்
சித்தன்கேணி
ஸ்ரீ விநாயகர் பவனி
இன்று (14.12.2000) வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு விநாயகர் தனது விஸ்வரூபக் காட்சியுடன்
(20 அடி கொண்ட விநாயகர்) உலா வருவார்.
விளம்பர அனுசரிப்பு:
ஜெசீபா ஏஜென்சி, 132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
இராஜேந்திரா வர்த்தக நிலையம், 192, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
ஜெஸ்கோ, 190, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(C/14285)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.12.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.